குருபாதம்

ஞானசம்பந்தம்

தருமை ஆதீனத் திங்கள் இதழ்

மலர் 48] விபவ ஆண்டு கார்த்திகைத்திங்கள் 10-12-88 [இதழ் 1

சீர்காழி வட்டம், திருச்சிற்றம்பலம் கிராமத்தில்

அருள்மிகு சித்திவிநாயகர், காத்தவராயசுவாமி, மகாமாரியம்மன்

திருக்கோயில்களின் மகாகும்பாபிஷேகத்திற்கு எழுந்தருளி

ஆசியுரை வழங்கிய

550 20342



தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களுக்கு, கிராம மக்கள் சார்பில், திருப்பணிச்செல்வர், திரு. சு. விசுவலிங்கம் பொன்னடை போர்த்தி வழிபடும் காட்சி. (14—9—88.)

தருமையாதீனக் குருமுதல்வர்

ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்தசுவாமிகள்

உ

குருபாதம்

ஸ்ரீ குருஞானசம்பந்தர்

அருள்வாக்கு

என்றும் பிரியா
  இருளருளா ளிங்கவின்பாய்த்
துன்றுசிவ போகமெனச்
  சொல்லாமல் — உன்றன்
நலம்போக மென்றுரைத்தாய்
  நாமறிவோம் நீயும்
மலம்போக முத்தியென்ப வன்.

— முத்திநிச்சயம் 15

ஆசிரியர் :-

வித்துவான்

இராமலிங்கத் தம்பிரான்
சுவாமிகள்

துணையாசிரியர் :-

மகாவித்துவான்

சி. அருணவடிவேல்
முதலியார்

உ

குருபாதம்

ஞானசம்பந்தம்

தருமையாதீனத்திங்கள்இதழ்

மலர் 48 || 10–12–88 || இதழ் 1

உட்பொருள்

எண்		பக்கம்
1	குருமூர்த்தக் கோயில் களின் குடமுழுக்குப் பெருவிழா	1
2	தருமை ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் வழங்கிய ஆசியுரை ...	9
3	விஷ்ணு பக்தி ...	13
4	நாற்பத்தெட்டில் நலமே வாழி... ! ...	16
5	பார்வதி திருமணம் ...	17
6	போதமும் சித்தியும் ...	22
7	அப்பர் வழங்கிய ஆன்மீகச் செல்வம் ...	25
8	பாலொத்த மென்மொழி யாளும் உமைநங்கையும்	29
9	கழறிற்றறிவார் ...	33
10	மேலை நாட்டுத் தத்துவ மேதைகள் ...	38
11	செய்திகள் ...	41
12	எதிர்காலம் ...	44
13	மதிப்புரை ..	48
14	கடிதம்	24, 28, 43, 48
15	இதழ்வழிச் சைவசமயக் கல்வி IV. பாடம்–9. ...	49
16	ஞானசம்பந்தம் 47 ஆம் ஆண்டு மலர்ப் பொருளடக்கம் ...	i-iv

உ

குருபாதம்

ஞானசம்பந்தம்

மலர் 48 ★ இதழ் 1

தருமை ஆதீனத் திங்கள் இதழ்

விபவ மார்கழி 10—12—1988

பொன்தயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்தயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே.

— திருஞானசம்பந்தர்.

குருமூர்த்தக் கோயில்களின் குடமுழுக்குப் பெருவிழா
(ஸ்ரீ குமரகுருபரரின் 300 ஆவது ஆண்டு நினைவாக)

குருவே சிவம் :

எல்லாம் வல்ல சிவபரம் பொருள், மானுட உயிர்க்கு அருள் செய்யும் திறம் மூன்று. ஆணவமாகிய ஒருமலமுடைய விஞ்ஞான கலருக்கு உள்நின்றே உணர்த்திஞானத்தைத்தருவார். ஆணவமும், கன்மமுமாகிய இருமலமுடைய பிரளயாகலருக்குத் தமது நாற்றோளும், முக்கண்ணும், கறைமிடறும் உடைய இயற்கை வடிவத்தில் தோன்றி ஞானத்தை அருளுவார். ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலமுடைய சகலருக்கு மானுடச்சட்டை தாங்கிக் குருவாக எழுந்தருளி வந்து ஞானத்தை அருளுவார்.

இறைவன் தமது உண்மை வடிவத்தைக் காட்டினுல், அதனைக் கண்டு பயன் பெறும் ஆற்றல் ஒரு சில உயிர்களுக்கே உண்டு. ஆகையால், ஏனையோர் பலரையும் இறைவன், ஒரு பார்வை மிருகத்தைக் கொண்டு, பல மிருகங்களைப் பிடிப்பதுபோல் மனித உருவில் ஆசான் மூர்த்தியாய் வந்தே ஆட்கொள்வர். இதனை,

"பார்வையென மாக்களைமுன் பற்றிப் பிடித்தற்காம் போர்வை"

என விளக்கும் திருவருட்பயன்.

" குருவே சிவமெனக் கூறினன் நந்தி "

என விளக்கும் திருமந்திரம்.

" குரவனே அயன்அரி குரவனே சிவன்
குரவனே தந்தைதாய் குரவனே எலாம் "

என அருளும் காஞ்சிப் புராணம்.

குருமூர்த்த வழிபாடு :

திருக்கயிலாய பரம்பரையில் மெய்கண்டார் முதல் இவ்வாறு மானுடச்சட்டை தாங்கி ஞான குருவாய் எழுந்தருளி ஞானம் விளைத்த அருளாளர்களுக்கு, அவர்கள் பரிபூரணம் எய்தியபின் சமாதி அமைத்து – சிவலிங்கப் பிரதிட்டை செய்து, அல்லது திருவுருவப் பிரதிட்டை செய்து குருமூர்த்த ஆலயம் கண்டு – சிவமாகவே போற்றி வழிபடுதல் சைவ மரபாகும். ஞானிகளைப் பரிபூரணம் எய்தியபின் சிதை அமைத்து எரியூட்டல் கூடாது என்கிறது திருமந்திரம்.

"எண்ணிலா ஞானி உடல்எரி தாவிடின்
அண்ணல்தம் கோயில் அழலிட்ட தாங்கொக்கும்
மண்ணின் மழைவிழா வையகம் பஞ்சமாம்
எண்ணரும் மன்னர் இழப்பார் அரசே."

எனவே, திருக்கயிலாய பரம்பரையில் வந்த நமது தருமை ஆதீன ஞானசிரியர்களுக்கும் ஆங்காங்கே குருமூர்த்த ஆலயம் அமைத்து, சிவலிங்கப் பிரதிட்டை செய்து, நித்திய நைமித்திக பூஜைகள் இயற்றுவது நியமமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ஸ்ரீ குமரகுருபரர் 300 ஆவது ஆண்டு நினைவாக :

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்திற்குச் சொந்தமான, தருமபுரம், திருமஞ்சனவீதியில் கோயில் கொண்டு அருள் பாலித்துவரும் அருள்மிகு. சச்சிதானந்த விநாயகர் திருக்கோயில், இக்கோயிலை ஒட்டி அமைந்துள்ள வடக்குக் குருமூர்த்தத்தில், தருமை ஆதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் திருவுளப்பாங்கின் வண்ணம் புதிதாக எழுப்பப்பெற்ற, தருமை ஆதீனம் 20 ஆவது குருமூர்த்திகள் ஸ்ரீசிவஞான தேசிகசுவாமிகள், 21 ஆவது குருமூர்த்திகள் ஸ்ரீ சச்சிதானந்த தேசிகசுவாமிகள் குருமூர்த்த ஆலயங்கள், திருப்பணிகள் நிறைவேற்றப்பெற்ற ஏனைய 13 குருமூர்த்தங்கள் ஆகியவற்றின் குடமுழுக்குப் பெருவிழா ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் 300 ஆவது ஆண்டு நினைவாக விபவ ஆண்டு, தைத்திங்கள் 16 ஆம் நாள் (29—1—1989) ஞாயிற்றுக்கிழமை காலை 9-15 மணிக்குமேல் 11 மணிக்குள் திருவருளும், குருவருளும் துணைநிற்க மிகச்சிறப்பாக நடைபெறவிருப்பதை "ஞானசம்பந்தம்" மிகுந்த மகிழ்வுடன் தன் நேயர்களுக்கு அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறது.

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்தின் திருப்பணி :

தருமை, திருமஞ்சனவிதி, அருள்மிகு சச்சிதானந்த விநாயகர் திருக்கோயில், இக்கோயில் வளாகத்தில் அமைந்த பதினைந்து வடக்குக் குருமூர்த்த ஆலயங்களின் குடமுழுக்கு விழாவை ஸ்ரீ குமரகுருபரர் 300 ஆவது ஆண்டு நினைவாகநிகழ்த்தத் தருமைக் குருமணி அவர்கள் திருவுளம் பாலித்தார்கள். ஸ்ரீ குமரகுருபரரின் ஞானாசிரியராகிய தருமை ஆதீனம் நாலாவது குருமூர்த்திகள் ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக சுவாமிகளின் குருமூர்த்த ஆலயம், வடக்குக் குருமூர்த்தத்தில் அமைந்திருக்கும் தொடர்பு பற்றியே இம் முடிபு மேற்கொள்ளப் பெற்றது. 'மற்றுநினையாத முன்வந்து நிற்பினும் நிற்கும்' என்பதற்கேற்ப, திருவருள் வயத்தால் மேலும் ஒரு பொருத்தம் அமைந்தது. அருள்மிகு சச்சிதானந்த விநாயகர் கோயில் முகப்பில் அமைந்துள்ள கல்வெட்டு ஒன்று, இவ்விநாயகர் ஆலயம், திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்தின் ஏழாவது அதிபர் காசிவாசி ஸ்ரீ குமரகுருபரத் தம்பிரான் (கி. பி. 1756 - 1791) சங்கற்பித்துக் கொண்டவாறு அவர்களுக்குப் பின்வந்த ஸ்ரீ காசி மடத்தின் ஒன்பதாவது அதிபர் காசிவாசி ஸ்ரீசடையப்பத்தம்பிரான் (கி. பி. 1798 - 1835) சுவாமிகளால் கருங்கல் திருப்பணியாகக் கி. பி. 1816 இல், தருமை ஆதீனம் பன்னிரண்டாவது குருமூர்த்திகள் ஸ்ரீலஸ்ரீ முத்துக்குமார தேசிக சுவாமிகள் (கி. பி. 1782 - 1827)

ஆட்சிக்காலத்தில் கட்டி முடிக்கப்பட்டதைத் தெளிவு பட விளக்கு கின்றது. ஸ்ரீ குமரகுருபரரின் ஆசாரியர் குருமூர்த்தக் குடமுழுக்கும், அவர்களுக்குப்பின் வந்தவர்களால் கட்டப்பெற்ற ஸ்ரீ சச்சிதானந்த விநாயகர் திருக்கோயில் குடமுழுக்கும் ஸ்ரீ குமரகுருபரரின் 300 ஆவது ஆண்டு நினைவாக அமைந்திருப்பது, தருமைக் குருமணி யின் ஒவ்வோர் நினைவும் ஒன்றுக்குப்பத்தாகத் தவவலியால் கூடி வருவதை மெய்ப்பிப்பதாகவே காணப்படுகிறது.

முதன்மைப் பணிகள் :

திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீனத்தின் 26 ஆவது குருமூர்த்திகளாக கி. பி. 1971 இல் ஞானபீடம் ஏறிய ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், அரசின் சட்டதிட்டங்கள் காரணமாகவும், குடிமக்களின் மனோபாவம் காரண மாகவும், ஆதீனம் மற்றும் ஆதீனத் திருக்கோயில் நிலக்குத்தகை வருவாய்குறைவு முதலியவற்றால், நித்திய, நைமித்திக வழிபாடு களுக்கு ஏற்பட்ட முட்டுப்பாடுகளை இயன்றவரை அகற்றி, நிரந்தரமான, தடையற்ற வழிபாட்டை உறுதிசெய்வதை முதன்மை யாக மேற்கொண்டார்கள். காலத்தின் தேவை கருதிக் கல்வி, மருத்துவம் முதலிய சமூக சேவைகளை முனைப்புடன் நிறைவேற்ற ஸ்ரீ குருஞானசம்பந்தர் பணிமன்றத்தைத் தருமையைத் தலைமை யிடமாகக் கொண்டு நிறுவியருளினார்கள். ஆதீனத்தின் உயர் குறிக்கோளாகிய சைவசித்தாந்த வளர்ச்சிக்காகத் தருமைஆதீனம் அனைத்துலக சைவ சித்தாந்த ஆராய்ச்சி நிறுவனத்தைப் பெரும் நிலைநிதி நிறுவி அமைத்தருளினார்கள். ஆதீனம், மற்றும் ஆதீனத் திருக்கோயில் திருப்பணிகளை முனைப்போடு நிறைவேற்றி அடுத்தடுத்துக் குடமுழுக்குச் செய்விக்கவேண்டுமென்ற தருமைக் குருமணி அவர்களின் திருவுள்ளக்குறிப்பின் வெளிப்பாடு, அருள்மிகு சச்சிதானந்த விநாயகர் திருக்கோயில் குடமுழுக்கு விழாவில் புலப் பட்டுத் தோன்றுகின்றது.

சைவ சமய மரபு :

தருமை ஆதீனம் ஸ்ரீ மகாலக்ஷ்மி துர்க்காதேவி திருக்கோயில் முன்னர், சுமார் 3 லட்சம் ரூபாய் செலவில் மிகப்பெரியதாய் அமைக்கப்பட்டுள்ள மகாமண்டபத் திருப்பணி, தருமை ஆதீனத் திற்குச் சொந்தமான திருமுல்லைவாயில் அருள்மிகு. அணி கொண்ட கோதையம்மை உடனுய முல்லைவனநாதர் திருக்கோயில் முற்றுப்பெறும் நிலையில் உள்ள திருப்பணி, முன்னரே தொடங்கப் பெற்று, சீராக நடைபெற்றுவரும் சீகாழி அருள்மிகு. சட்டைநாதப்

பெருமான் திருக்கோயில் திருப்பணி முதலியன விரைவில் முற்றுப் பெற்றுக் குடமுழுக்காண உள்ளன. இவற்றிற்கெல்லாம் முன்னாக அருள்மிகு. விநாயகப் பெருமானை எவ்வித விக்கினமும் இன்றிக் குடமுழுக்கு விழாக்கள், அடுத்தடுத்து நடந்தேற, வணங்கித் தொடங்குவதாகவும், குருவழிபாட்டின் வழியே சிவவழிபாடு அமைதல் சமயமரபு என்பதை மெய்ப்பிப்பதாகவும் மேற்குறித்த குடமுழுக்கு விழாக்கள் அமைகின்றன.

குருமூர்த்தங்கள் :

ஸ்ரீ குருஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளால் தோற்றுவிக்கப்பெற்ற தருமை ஆதீனம், அடுத்தடுத்து உபதேச மரபில் ஞானபீடம் ஏறிய குருமூர்த்திகளால் முறையாகப் பரிபாலிக்கப் பெற்று வருகின்றது. ஏறத்தாழ, கி. பி. 1560 முதலாக வளர்ந்து வரும் ஞானபீடத்தை அலங்கரித்து,பரிபூரணம்எய்திய குருமூர்த்திகள் இருபத்து ஐவர். குருமுதல்வர் ஸ்ரீ குருஞானசம்பந்தர் ஜீவசமாதி கூடிய இடத்தில் அமைக்கப்பெற்ற சிவாலயமே இன்று தருமையில் மேலைக்கோயில் என்று அழைக்கப்படும் அருள்மிகு. ஞானாம்பிகை உடனுறை ஞானபுரீசுவரர் ஆலயமாகத் திகழ்கிறது. ஏனைய குருமூர்த்திகள் அடக்கம் செய்யப்பெற்ற இடங்களில் அமைக்கப் பெற்றுள்ள ஆலயங்கள், குருமூர்த்தங்கள் என்று அழைக்கப்பெறுகின்றன. தருமையில் இவ்வாறான குருமூர்த்தங்கள் இரண்டு இடங்களில் அமைந்துள்ளன. ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயிலின் நேர்மேற்கே ஸ்ரீ ஆனந்தபரவசர் பூங்காவில் அமைந்துள்ள நான்கு குருமூர்த்தங்கள் மேலைக் குருமூர்த்தம் என்று வழங்கப்படுகிறது. ஆதீனம் வடக்குவீதியிலிருந்து காவிரிசெல்லும் திருமஞ்சனவீதியின் மேல்பால் அமைந்துள்ள பதினைந்துகுருமூர்த்திகளின் குருமூர்த்தங்கள் வடக்குக் குருமூர்த்தம் என்று வழங்கப்படுகிறது.

பிற இடங்களில் :

தருமையில் குருமுதல்வர் முதலாக அமைந்துள்ள இருபது குருமூர்த்தங்கள் அல்லாமல், எஞ்சிய ஐந்து குருமூர்த்தங்கள் தமிழ் நாட்டின் பல பகுதிகளில் அமைந்துள்ளன. தலயாத்திரை மேற்கொண்ட காலங்களில் பரிபூரணம் எய்திய குருமூர்த்திகளின், குருமூர்த்த ஆலயங்கள் அவர்கள் பரிபூரணம் எய்திய தலங்களிலேயே அமைக்கப் பெற்றுள்ளன. ஆறாவது குருமூர்த்திகள் ஸ்ரீ திருஞானசம்பந்ததேசிக சுவாமிகள் குருமூர்த்தம்திருநெல்வேலி-சிந்துபூந்துறையிலும், எட்டாவது குருமூர்த்திகள் ஸ்ரீ அழகிய திருச்சிற்றம்பலதேசிக சுவாமிகள் குருமூர்த்தம், தஞ்சைமாவட்டம்

மன்னார்குடியை அடுத்த கோட்டூரிலும், பதினாறாவது குருமூர்த்திகள் ஸ்ரீ சச்சிதானந்ததேசிக சுவாமிகள் குருமூர்த்தம் கன்னியாகுமரி மாவட்டம் சிவசைலத்திலும், பதினேழாவது குருமூர்த்திகள் ஸ்ரீ மாணிக்கவாசக தேசிக சுவாமிகள் குருமூர்த்தம் தஞ்சை மாவட்டம் திருபுவனத்திலும், பதினெட்டாவது குருமூர்த்திகள் ஸ்ரீ சிவஞான தேசிக சுவாமிகள் குருமூர்த்தம் தஞ்சைமாவட்டம் திருப்பனந்தாளிலும் அமைந்துள்ளன.

மேலைக் குருமூர்த்தம் :

மேலைக் குருமூர்த்தத்தில் இரண்டாவது ஸ்ரீ ஆனந்தபரவச தேசிக சுவாமிகள், பத்தொன்பதாவது ஸ்ரீ மாணிக்கவாசக தேசிக சுவாமிகள், இருபத்துநாலாவது, ஸ்ரீ சண்முக தேசிக சுவாமிகள், இருபத்தைந்தாவது ஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக சுவாமிகள் குருமூர்த்தங்கள் அமைந்துள்ளன.

வடக்குக் குருமூர்த்தம் :

வடக்குக் குருமூர்த்தத்தில், ஸ்ரீ குருஞானசம்பந்தர் ஜீவசாதியினின்றும் வெளிப்பட்டு, உபதேசித்து, நிட்டைகூடுமாறுசெய்தருளப் பெற்ற மூன்றாவது குருமூர்த்திகள் ஸ்ரீ சச்சிதானந்த தேசிக சுவாமிகள், ஸ்ரீ குமரகுருபரரை ஆட்கொண்ட நாலாவது ஸ்ரீ மாசிலாமணி தேசிக சுவாமிகள், தென்மாவட்டங்களில் ஏற்பட்ட பெரு வெள்ளத்தைத் தவவலியால் கட்டுப்படுத்திய ஐந்தாவது ஸ்ரீ ஞான சம்பந்த தேசிக சுவாமிகள், ஸ்ரீ குருஞானசம்பந்தர் ஆலயம் கண்டு வருஞ்சிரம சந்திரிகை நூல் அருளிய ஏழாவது ஸ்ரீ திருவம்பல தேசிக சுவாமிகள், சித்தாந்த நிச்சயம் நூல் அருளிய ஒன்பதாவது ஸ்ரீ திருநாவுக்கரசு தேசிக சுவாமிகள், முதன் முதல் ஸ்ரீ காசி யாத்திரை மேற்கொண்டு, திருவருட்பா என்னும் பெயரில் பதினாறு நூல் யாத்தளித்த பத்தாவது ஸ்ரீ சிவஞான தேசிக சுவாமிகள், நஞ்சுகலந்த பாலை விபூதி இட்டு அமுதாக மாற்றிப் பருகிய பதினாறாவது ஸ்ரீசச்சிதானந்ததேசிக சுவாமிகள், ஸ்ரீஞானபுரீசுவரர் ஆலயத்தை கி. பி. 1799 இல் புதுப்பித்துக் குடமுழுக்குச் செய்வித்த பன்னிரண்டாவது ஸ்ரீமுத்துக்குமாரதேசிக சுவாமிகள், கங்கையைத் தருமைக்குக் கொண்டு வரச்செய்து நீராடிய பெருமைக்குரிய பதின்மூன்றாவது ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக சுவாமிகள், பாடல் ஒன்று அருளி மழை பெய்வித்த பதினான்காவது ஸ்ரீ கந்தப்பதேசிக சுவாமிகள், சாரங்கி வாத்தியத்தில் வல்ல பதினைந்தாவது ஸ்ரீ மாசிலாமணி தேசிக சுவாமிகள், தற்பொழுது புதிதாகக் குருமூர்த்த ஆலயம் அமைக்கப்பட்டுள்ள 20 ஆவது ஸ்ரீ சிவஞான தேசிக சுவாமிகள், 21 ஆவது ஸ்ரீ சச்சிதானந்த தேசிக சுவாமிகள்,

முதல் சைவ சித்தாந்த மாநாடு கண்ட இருபத்திரண்டாவது ஸ்ரீ மாணிக்கவாசக தேசிக சுவாமிகள், அறிஞர் பலரை ஆதீனப் புலவர்களாகக் கொண்டு சைவத் தமிழ்வளர்த்த இருபத்துமூன்றாவது ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக சுவாமிகள், ஆகிய பதினைந்து குருமூர்த்திகளின் குருமூர்த்தங்கள் இவ்வடக்குக் குருமூர்த்தத்தில் இடம் பெற்று எழில்மிக்கு விளங்குகின்றன.

அமைத்தருளியோர்:

தருமை ஆதீன குருமூர்த்த ஆலயங்களில் ஸ்ரீ குருஞான சம்பந்தர் குருமூர்த்தம் ஏழாவது குருமூர்த்திகள் ஸ்ரீ திருவம்பல தேசிக சுவாமிகளால் சிவாலயமாக அமைக்கப்பெற்றது. 25 ஆவது ஸ்ரீ கயிலைக்குருமணி அவர்கள் குருமூர்த்தம் 26 ஆவது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களால் அமைக்கப்பெற்றது. 4 ஆவது குருமூர்த்தம் 24 ஆவது குருமூர்த்திகள் காலத்தில் முதன் முதல் அமைக்கப்பெற்றது. தற்போது புதிதாக எடுக்கப்படும் 20, 21 ஆவது குருமூர்த்தங்களைத் தவிர எஞ்சிய குருமூர்த்தங்கள் யாவும் 25 ஆவது குருமூர்த்திகள் ஆட்சிக் காலத்தில் எடுக்கப்பெற்றன.

சச்சிதானந்த விநாயகர்:

வடக்குக் குருமூர்த்தத்தின் முகப்பில் 13, 14, 15, 22 ஆவது குருமூர்த்தங்கள் நான்கும் 25 ஆவது குருமூர்த்திகளின் காலத்தில் நிலைமட்டம்வரை கட்டப்பெற்றன. 26 ஆவது குருமூர்த்திகள் காலத்தில் விமானங்கள் பூர்த்திசெய்து குடமுழுக்குச் செய்விக்கப் பெற்றன. கிழக்கு நோக்கி அமைந்துள்ள அருள்மிகு. சச்சிதானந்த விநாயகர் ஆலயம் இன்றைக்கு 172 ஆண்டுகளுக்கு முன்னர் கி. பி. 1816 இல் திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்தின் ஒன்பதாவது அதிபராகத் திகழ்ந்த காசிவாசி ஸ்ரீ சடையப்பத் தம்பிரான் சுவாமிகளால் கட்டியளிக்கப்பெற்றமை இக்கோயில் முகப்பில் நிலைக்கு மேல் உள்ள கல்வெட்டு ஒன்றால் அறியவருகிறது. இதுபோது இத்திருக்கோயிலின் மேல் விமானம் முழுதுமாகப் பழுது பார்க்கப்பட்டு, நாற்புறமும் ஐதீகச் சுதைகள் அமைக்கப்பெற்று, கோயில் மண்டபத்தின் மேல் முகப்புப் பகுதியில் விநாயகர் முதலிய சுதை வேலைப்பாடுகளும் கண்டு முற்றாகத் திருப்பணி செய்யப் பெற்றுள்ளது.

புதிய குருமூர்த்தங்கள்:

வடக்குக் குருமூர்த்த முதல்வரிசையில் இதுநாள் வரை வில்வக் கன்று நடப்பெற்று வழிபாடு நிகழ்த்தப் பெற்று வந்த தருமை ஆதீன 20 மற்றும் 21 ஆவது குருமூர்த்திகளின் குருமூர்த்தங்கள்

முழுதுமாக ஏனைய குருமூர்த்தங்களைப் போல், கருவறை மற்றும் முன்மண்டபங்களுடன் முற்றிலும் புதிதாக அமைக்கப் பெற்றுள்ளன. ஏனைய 13 குருமூர்த்தங்களும் சிதைவுகளைச் செப்பம்செய்து வண்ணம் வைக்கப் பெற்றுள்ளன. குருமூர்த்தத்தின் வடபுறச் சுற்றுச்சுவர் முற்றிலும் பழுதுபட்ட நிலையில் புதியதாக எழுப்பப் பெற்றுள்ளது.

வழிகாட்டும் பண்பு :

தருமையில்உள்ள எல்லாக்குருமூர்த்தங்களுக்கும் நாள்தோறும் தம்பிரான் சுவாமிகளைக்கொண்டு, நித்திய வழிபாடுகளையும்' குருபூஜை நாள்களில் சிறப்பு வழிபாடுகளையும் முறையாக நிகழ்த்தி வரும் தருமைக் குருமணி அவர்கள் ஞானபீடம் ஏறிய நாள் முதல் இன்றளவும் நாள்தோறும், தம் ஞானாசிரியர் ஸ்ரீ கயிலைக் குருமணி குருமூர்த்தம் அமைந்துள்ள மேலைக் குருமூர்த்தங்களையும், வாரம் தோறும் குருவாரத்தில் வடக்குக் குருமூர்த்தங்களையும் வழிபடும் நியமம் உடையவர்கள். குருமூர்த்தங்களுக்குத் திருச்சுற்றும், பிராகாரம், ஒளி விளக்குகள், நந்தவனம் அமைத்தருள ஏற்பாடுகள் செய்தவர்கள். ஆதீனக் குருபூஜை நாளன்று குருமூர்த்திகளின் சிறப்புக்களை விளக்கிக் கூறச்செய்து அன்பர்களுடன் வழிபடும் நியமமுடையவர்கள்.

அன்பான வேண்டுகோள் :

தருமை 26 ஆவது ஸ்ரீலஸ்ரீ குருமணி அவர்களின் திருவுளப் பாங்கின் வண்ணம் நடைபெறவிருக்கும் தருமை ஸ்ரீ சச்சிதானந்த விநாயகர் மற்றும் வடக்குக் குருமூர்த்தங்களின் குடமுழுக்குப் பெரு விழாக்களில் பக்தர்களும், சீடர்களும் சைவ மெய்யன்பர்களும் இயன்ற அளவு திருப்பணியில் பங்குகொண்டு திருவருளும், குரு வருளும்பெற்று உய்யுமாறு "ஞானசம்பந்தம்" அன்புடன் அழைக் கிறது.

இயன்ற திருப்பணி இனிதாய்ச் செய்வோம்!
சச்சிதானந்த விநாயகர் சரணம் பணிவோம்!
குருமூர்த்தக் குடமுழுக்குத் தரிசித்து மகிழ்வோம்!

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீனம்

26 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

23—11—88 அன்று கார்த்திகைத் திருநாளில்

வழங்கியருளிய

ஆசியுரை

" செங்கணனும் பிரமனும் தம்முளே
எங்கும் தேடித் திரிந்தவர் காண்கிலர்
இங்குற்றேன் என்று இலிங்கத்தே தோன்றினன்
பொங்கு செஞ்சடைப் புண்ணிய மூர்த்தியே "

— அப்பர்.

தீபத்திருநாள் :

இருவர் தொழத்தழலாய் நின்ற ஐதிகத்தை நினைவூட்டும் திருநாளே கார்த்திகை தீபத் திருநாள். எல்லாம் வல்ல சிவபரம் பொருள் ஆதியும் அந்தமுமில்லா அரும்பெருஞ் சோதியாய்த் திருவண்ணமலையில் அயற்கும் மாற்கும் அழல் வடிவம் காட்டி நின்ற ஐதிகத்திருநாள். கார்த்திகை மாதத்தில் முழுமதி நாளொடு கார்த்திகை விண்மீன் இணைந்துவரும் திருநாள். பரணி தீபம் என்றும், அண்ணமலை தீபம் என்றும், சர்வாலய தீபம் என்றும் தமிழ்நாட்டுச் சிவாலயங்களில் எல்லாம் சொக்கப்பானை கொளுவி வழிபடும் பெருநாள். இல்லங்கள் தோறும் மங்கல அகல்விளக்குகளை வரிசைப்பட ஏற்றி வைத்துச் சோதியாய், சுடராய், சூழொளி விளக்காய் நிற்கும் இறைவனை வழிபட்டு ஏத்தும் இனிய நன்னாள்.

தத்துவம் :

தமிழ்நாட்டு மக்கள் பக்திச் சிரத்தையோடு கொண்டாடும் திருவிழாக்களும், பண்டிகைகளும் வெறும் கேளிக்கையாக அமைவ

---

* 23-11-88 கார்த்திகைதீபத் திருநாளன்று, திருச்சிராப்பள்ளி அகில இந்திய வானொலி நிலையத்தார் ஒலிபரப்பிய ஆசியுரையைத் தழுவியது.

தில்லை. அவற்றின் பின் புலத்தில் ஆழமான இறையுணர்வும், சமூக நாட்டமும் இருத்தலை நுட்பமாக ஆராய்ந்தால் அறியமுடியும்.

யார் பெரியவர் என்று தம்முள் மாறுபட்டு நின்ற பிரமன், திருமால் என்ற இருவரின் செருக்கினை அகற்ற, சிவபிரான் அனலுருவாய்த் திருவண்ணாமலையில் பேருருக் காட்டி நின்றான். முடிதேடிப் பிரமனும், அடிதேடித் திருமாலும் இயலாது செருக் கடங்கினர். இதனைத் திருமந்திரம்,

> "பிரமனும் மாலும் பிரானே நான் என்னப்
> பிரமன்மால் தங்கள்தம் பேதமையாலே
> பரமன் அனலாய்ப் பரந்துமுன் னிற்க
> அரனடி தேடி அரற்றுகின் றாரே"

எனக்குறித்துச் செல்கிறது. திருஞானசம்பந்தர் அடி, முடி தேடிய வரலாற்றை ஒவ்வொரு பதிகத்திலும் ஒன்பதாம் பாடலுள் பதிவு செய்து காட்டுகின்றார்.

தொல்விழா :

கல்விக்கு நாயகியாகிய கலைமகளின் கணவன் பிரமன், செல்வத்துக்கு நாயகியாகிய திருமகளின் கொழுநன் திருமால். இவ்விருவராலும் அடி முடி காணப்படாதவன் சிவபரம்பொருள் என்பது, கல்விச்செறுக்காலோ, செல்வச்செறுக்காலோ இறைவனைக் காண இயலாது என்பதை உணர்த்தி நின்றது. இறைவன் அன்பால் மட்டுமே தேடிக்காணத் தக்கவன் என்பது அடி முடி தேடிய வரலாறு உணர்த்தும் தத்துவமாகும். "அன்பெனும் வலையுள் அகப்படும் மலையே" என்று இராமலிங்க அடிகளும், "பக்தி வலையிற் படுவோன் காண்க" என்று மணிவாசகரும் கூறிப் போந்தமையும் காண்க.

சிவபரம்பொருள் திருவண்ணாமலையில் அனல் வடிவாய்த் தோன்றி நின்ற நாளே இந்நன்னாள்.

தமிழ் மக்கள் நெடுங்காலமாகக் கொண்டாடிவரும் மிகச்சிறந்த தொன்மையான விழாக்களுள் ஒன்றே கார்த்திகைத் தீபத்திருநாள்.

சங்ககாலத்திலேயே இந்நாள் சிறப்புற்றிருந்தமை இலக்கியங்களால் தெரிய வருகின்றது. அகநானூற்றிலும், நற்றிணையிலும் கார்த்திகை விளக்கீடு குறிக்கப்பெறுகிறது.

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றாகிய கார்நாற்பதில்,

" நலமிகு கார்த்திகை நாட்டவர் இட்ட தலைநாள் விளக்கு "

என்ற தொடர் காணப்படுகிறது. நலமிகு கார்த்திகை என்ற தொடர் கார்த்திகை விழாவின் சிறப்பினைக் குறித்து நிற்கிறது.

களவழி நாற்பது கார்த்திகை விளக்கீட்டை உவமையாக்கி உரைக்கிறது.

'கார்த்திகைச் சாற்றில் கழிவிளக்கைப் போன்றனவே,' 'சாறு' என்ற பழந்தமிழ்ச்சொல் 'விழா' என்ற பொருளில் வருகிறது. 'கழி' என்ற உரிச்சொல் மிகுதிப்பொருள் தரும். ஏராளமான விளக்குகள் கார்த்திகை விழா நாளில் ஏற்றப்பெற்றமை இதனால் தெரிய வருகின்றது.

சீவகசிந்தாமணி, 'கார்த்திகை விளக்கீட்டன்ன, கடிகமழ் குவளைப் பைந்தார்' என உவமை வாயிலாகக் கார்த்திகை விளக்கீட்டைப் பதிவு செய்து காட்டுகின்றது.

தேவாரக்குறிப்பு :

திருஞானசம்பந்தர், தமது மயிலாப்பூர் பதிகத்துள் கி. பி. ஏழாம் நூற்றாண்டில் தமிழ்நாட்டுச் சிவாலயங்களுள் நடைபெற்று வந்த பெரியதிருவிழாக்களை வரிசைப்படுத்தி அழகுறக் குறித்துள்ளார். இப்பதிகத்துள்,

" வளைக்கை மடநல்லார் மாமயிலை வண்மறுகில்
துளக்கில் கபாலீச்சரத்தான் தொல்கார்த்திகைநாள்
தளத்தேந் திளமுலையார் தையலார் கொண்டாடும்
விளக்கீடு காணாதே போதியோ பூம்பாவாய் "

எனவரும் பாடல் 'தொல்கார்த்திகை நாள்' என இத்திருநாளின் பழமையை விளக்குகின்றது. தையலார் கொண்டாடும் விளக்கீடு என வரும் குறிப்பு, இவ்விழா இல்லுறை மகளிரால் எடுக்கப்படுவது என்பதைச் சுட்டுகின்றது.

இலக்கண உரையில் :

தொல்காப்பியப் பொருளதிகாரப் பாடாண்திணை நூற்பாவில் வரும் 'வேலின் நோக்கிய விளக்குநிலை' என்ற தொடருக்கு உரைகாரர் நச்சினார்க்கினியர்,

" கார்த்திகைத் திங்களில் கார்த்திகை நாளில் ஏற்றிய
விளக்கு கீழும், மேலும், வலமும், இடமும் திரிபரந்து,
சுடர் ஓங்கிக் கொழுந்துவிட்டு எரிந்தது என்றுஅறிவோர்
ஆக்கம் பெறப்படுவதாம் "

எனவரையும் உரையால், கார்த்திகை விளக்கீடும், அத்தீபம் சுடர் விடுவதைக் கொண்டு நன்மை தீமைகள் அறியப்படும் திறமும் அறியவருகின்றன.

தலபுராணக் குறிப்பு :

நினைக்க முத்திதரும் திருவண்ணாமலையில் கார்த்திகை தீபத் திருநாளைக் கண்டு தொழுவார் பெறும் பேற்றினை தருமை ஆதீனப் புலவர் சைவ எல்லப்ப நாவலரின் அருணாசலப் புராணம் விரித்துரைக்கிறது.

" கார்த்திகைக்குக் கார்த்திகைநாள் ஒருசோதி
மலைமீது காட்டாநிற்போம்
வாய்த்தவந்த சுடர்காணில் பசிப்பிணியில்
லாதுலகில் மன்னிவாழ்வார்
பார்த்திவர்க்கும் அருந்தவர்க்கும் இடையூறு
தவிரும்இது பணிந்தோர்காண்போர்
கோத்திரத்தில் இருபத்தோர் தலைமுறைக்கு
முத்திவரம் கொடுப்போம் என்றார் "

கார்த்திகை தீப தரிசனம் செய்தாரின் வழியில் வரும் இருபத்தொரு தலைமுறையினருக்கும் வீடுபேறு வாய்க்கும் என இப்பாடலில் காணுதல் சிந்திக்கத்தக்கது.

வணங்கி வாழ்வோம் :

நெல், அவல் பொறித்து, வெல்லமிட்டுக்கலந்து படையலிட்டு, மங்கல விளக்கேற்றி, இருள்கடிந்து, ஆதியும் அந்தமுமில்லா இறைவனைச் சொக்கப்பனை வடிவில் தரிசித்து வணங்கி, கல்வி மற்றும் செல்வத்தால் வரும் ஆணவத்தின் நீங்கி, அன்பே வடிவாய் நாம் வாழ நம்மை ஆற்றுப்படுத்தும் இனிய தீபத்திருநாளில் " அண்ணாமலையான் அடிக்கமலம் சென்றிறைஞ்சி " வாழ்வாங்கு வாழ்வோமாக.

" நிறைமறைக் காடுதன்னில் நீண்டெரி தீபந்தன்னைக்
கறைநிறத் தெலிதன்மூக்குச் சுட்டிடக் கனன்றுதூண்ட
நிறைகடல் மண்ணும் விண்ணும் நீண்டவான் உலகமெல்லாம்
குறைவறக் கொடுப்பர் போலும் குறுக்கைவீ ரட்டனாரே. "

— அப்பர்.

விஷ்ணு பக்தி

திரு. ஆர். சுப்பிரமணியன்
பாண்டிச்சேரி

(மலர் 47, இதழ் 12, பக்கம் 632 இன் தொடர்ச்சி)

தர்மகோசம் என்ற நூலில் பின்கண்ட முறையில் கூறப் பெற்றிருக்கிறது.

"வாஸுதேவ பகவதி விஷ்ணௌ புருஷோத்தமத்வம் நாராயணத்வாரா நிருடமகமதிதி வக்தும் சக்யதே! யத: சதபதப் ராம்மணே புருஷோஹவை நாராயணோ காமயத, புருஷம் நாராயணம் ப்ராஜாபதிருவாச இதி வாக்யத்வயேன நாராயணஸ்ய புருஷத்வம் ஸம்கீர்திதம்। நாராயண ஏவ விஷ்ணு ரிதிவேதோத்திர காலினேஷு நிகமேஷு அப்யுபகத மிதி"

வேத சம்மிதைகளுக்குப் பிறகு ஏற்பட்ட நூல்களில்தான் நாராயணன் புருஷன் என்னும் சொற்கள் விஷ்ணுவின் பெயர்களாக ஆயின என்பது மேற்கூறிய தர்மகோசத்தின் பொருள். தைத்திரீய ஆரண்யகம் 10 ஆவது பிரச்னத்தில்,

ஸஹஸ்ரசீர்ஷம் தேவம் விச்வாக்ஷம் விச்வசம்புவம்।
விச்வம் நாராயணம் தேவமக்ஷரம் பரமம் பதம்॥

என்று துவங்கும் நாராயண அநுவாகத்திற்குச் சிவபெருமான்தான் பொருள். நாராயணன் என்ற பெயர் மகேசுவரனுடையது என்று வேதபாடியம் கூறுகிறது.

"பூர்வானுவாகாந்தே ஹ்ருதயபுண்டரீக உபாஸ்யம் யந்மஹேச்வரஸ்வரூபம் நிர்திஷ்டம் தஸ்மிந்நுபாஸ்ய குணவிசேஷா அஸ்மிந் நநுவாகே விஸ்தரேண ப்ரதர்ச்யதே"

முன் அநுவாகத்தில் இதய புண்டரீகத்தில் உபாஸிக்கப் பெற்ற எந்த மகேசுவரனுடைய சொரூபம் கூறப்பட்டதோ, இந்த அநுவாகத்திலும் அவனுடைய குணச்சிறப்பே விரிவாகக் கூறப் படுகிறது என்பது மேலே கூறிய வேதபாடியத்தின் பொருள்.

"நாராயண சப்தவாச்யோ ய: பரமேச்வர: பூர்வாநுவாகே அபிஹித:" நாராயணன் என்னும் பெயருக்குப் பொருளான பரமேச்வரர் எவரோ அவரைப்பற்றி முன் அநுவாகத்தில் கூறப் பட்டது என்று அடுத்த அநுவாகத்தின் முன்னுரையிலும் வேத பாடியத்தில் கூறப்பெற்றுள்ளது.

வித்யாரண்யர் அநுபூதிப் பிரகாசம் என்னும் நூலில்,

ஸர்வக்ஞ: ஸர்வசக்திச்ச ஸர்வாத்மா ஸர்வகோசத்ருவ :।
ஜகஜ்ஜன்மஸ்திதி த்வம்ஸ ஹேதுரேஷ மஹேச்வர :।
நாராயணு,பிதோ மந்த்ர ஏஷஸ்யை வாபிதாயக:।
பஞ்சாக்ஷரேண மந்த்ரேண சிவஇத்யே ஷகியதே॥

எல்லாமறிந்தவனும் சர்வசக்தனும், எல்லா வடிவினனும், எங்கு மிருப்பவனும், அசைவற்றவனும், உலகின் தோற்றம், இருப்பு, அழிவு இவைகளுக்குக் காரணமானவனும் இந்த மகேசுவரன். அவனே நாராயணன் என்று வேதம்கூறுகிறது. பஞ்சாக்ஷர மந்திரத் தில் சிவன் என்று இவரே கூறப்படுகிருர்.

அதே கருத்தை வைஷ்ணவ ஆசாரியரான இராமாநுசர் "வேதார்த்த சங்கிரகம்" என்ற நூலில் கூறுகிருர்.

"தஸ்ய ச ப்ரணவ ப்ரக்குதி பூதஸ்ய ஆகாராஸ்யய: பர: வாச்ய: ஸ ஏவ மஹேச்வர இதி" எவர் பிரணவப் பொருளான வரோ அவர் மகேச்வரர்.

"ஸர்வ வாசக ஜாத ப்ரக்குதி பூதாகார வாச்ய: ஸர்வவாச்ய ஜாத ப்ரக்குதி பூதோ நாராயணோ ய: ஸ மகேச்வர இத்யர்த்த:"

எல்லா சப்தத்திற்கும் ப்ரக்ருதி பூதமான பிரணவத்தின் பொருள் எந்த நாராயணனே அவரே மகேச்வரர் என்பது இராமநுசரின்வாக்கியம், எனவே நாராயணன் என்னும் பெயர் சிவ பெருமானுடையது என்பது நிச்சயம். வேதத்தில் சிவபெருமான் நீரைத் திருமேனியாகக் கொண்டவர் என்று கூறப்படுவதால் நாராயணன் என்ற பெயர் வேதத்தில் சிவபெருமானுக்கு வந்தது. இந்த நாராயணன் என்னும் பெயர் திருமாலுடைய பெயராக ஏற்பட்ட பிறகே கடல்நீரில் பாம்பணையில் பள்ளி கொண்ட கதை ஏற்பட்டது.

"சிபிவிஷ்டாயச" என்று யஜுர்வேதம் ருத்ரப்ரச்னத்தில் கூறப் படுகிறது. தைதிரியாரண்யகம் 10 ஆவது ப்ரச்சனத்தில் வரும் விஷ்ணுகாயத்ரியும் பிரகரணத்தால் விஷ்ணுவாசுதேவன் என்னும்

பெயர்களும் சிவபெருமானுடையதே என்று ஏற்படுகின்றது. இங்கு வாஸுதேவன் என்ற பெயர் வஸுதேவருடையமகன் என்ற பொருளில் வரவில்லை, எங்கும் நிறைந்தவர் என்ற பொருளில் வருகிறது.

ருக்வேதத்தில் "மஹேசுராய விஷ்ணவே சார்சத" என்று இந்த்ராவிஷ்ணு சூக்தத்தில் வருகிறது. இந்த்ரா விஷ்ணு சூக்தம் வேள்வியில் ஓதப்படுவது. உக்த்யம் என்றதுவேள்வியில் விநியோகம். எனவே "அர்ச்சத" என்பதற்கு வேள்வி செய்யுங்கள் என்பது தான் பொருள். நம் வழக்கத்தில் காண்பதைப் போல ஷோடசோப சாரபூசையை விஷ்ணுவுக்கு வேதம் கூறவில்லை. ஆனால் போதாயன க்ருஹ்ய சூத்ரம், அக்னி வேச்ய க்ருஹ்ய சூத்ரம், வைகானஸ க்ருஹ்ய சூத்ரம் போன்றவைகள் விஷ்ணுவின் திருவுருவ வழி பாட்டைக் கூறுகின்றன.

யாஸ்கர் நிருக்தத்தில் வாசுதேவன், நாராயணன் போன்ற சொற்கள் காணப்படவில்லை. அக்னிஹோத்ரம், சோமயாகம் இவை களைப் போல விதி, பலம், ப்ரயோகம் என்று சிவபூஜை, வேதத்தில் கூறப்பெற்றுள்ளது. வேத சமிதைகளில் பிரம்மா, விஷ்ணு, ருத்ரன் என்ற மும்மூர்த்தி முறை காணப்படவில்லை. பிரணவத்திற்குப் பொருள் கூறும் கோபதப்ராம்மணம், அதர்வசிகை, அதர்வசிரஸ், மைத்ராயணீயம் போன்ற உபநிஷத்துக்களில், அகாரத்திற்கு பிரம்மா, உகாரத்திற்கு விஷ்ணு, மகாரத்திற்கு ருத்ரன், அர்த்த மாத்ரைக்குப் பரம்பொருள் என்று கூறுகின்றன. மைத்ராயணீய உபநிஷத்தில் பிரம்ம - விஷ்ணு - ருத்ரர்களுக்கு முறையே ராசதம், சாத்விகம், தாமசம் என்று மூன்று குணங்களும் கூறப்பட்டிருக் கின்றன. இவை சமஷ்டி வடிவம்.

வியஷ்டியில் அகாரத்திற்கு நனவு நிலையில் உள்ள விச்வன் என்னும் பெயருடைய சீவன். உகாரத்திற்கு கனவுநிலையில் இருக்கும் தைசசன் என்னும் சீவன். மகாரத்திற்கு ஆழ்துயிலில் உள்ள பிராக்ஞன் என்னும் சீவன். நான்காவது அத்துவிதச் சிவன் என்று 'மாண்டுக்கியம்' என்னும் உபநிஷத் கூறுகிறது. நாம் ஒருவரே எவ்வாறு படைப்பவராகவும், காப்பவராகவும், அழிப்பவ ராகவும், நான்காவது நிலையை உடையவராகவும் இருக்கிறோமோ அவ்வாறே சமஷ்டியிலும் ஒருவனே மூவராக இருக்கிறான். சூரியன் காலையில் செவ்வண்ணத்துடன் உதயமாகிறான். அவனைக் கண்டு தாமரை மலர்கிறது. எல்லாப் பிராணிகளும் தத்தம் செயல்களில் ஈடுபடுகின்றன. இது பிரம்மாவின் சொரூபம். நண்பகலில் நீல வண்ணத்துடன் நடுவானில் நின்று அனைவரையும் தத்தம் நிலையில் நிற்கச் செய்கிறான். (தொடரும்)

நாற்பத்தெட்டில் நலமே வாழி...!

திரு. அரங்க. முத்துமணி

கரந்தை - தஞ்சை 2

வெண்பா

தென்னாட்டுச் சைவத்தைத் தேசங்கள் யாவையுமே
இந்நாள் அறிதற்கே ஏதுவாய் — மன்னும்நல்
மையமே கண்டிட்ட மாண்பார் குருமணியாம்
தெய்வம் தொழுவேன் தினம்.

வேறு

குற்றால அருவியது மூன்றே மாதம்
கொட்டிடுமாம்; குன்றினிலே குறிஞ்சிப் பூக்கள்
முற்றுகப் பூப்பதுதான் பனிரண் டாண்டாம்!
மூத்தபுகழ்ச் சைவத்தின் பெருமை தன்னைக்
கற்றோரின் உள்ளத்தில் மாதந் தோறும்
கவினுறவே தரும்''ஞான சம்பந் தம்''தான்
வற்றாத அருவியெனக் கருத்துத் தேனை
வழங்குதலைக் காண்கின்றோம்; வாழி!வாழி!

ஆழ்கடலில் முத்தெடுக்கும் தன்மை போல,
அருள்முனிவர் குருமணிகள் வழங்கும் செல்வம்
வீழ்கின்ற மழைத்துளிகள் விளைக்கும் முத்து!
விருப்புடனே ஏற்குங்கால் நமக்குச் சொத்தாம்!
வாழ்நாளைச் சிவனடியில் வைத்த தொண்டர்
வரலாற்றைச் சுருக்கமாய்த் தரவே, இன்று
ஏழ்கடலும் போற்றிடவே நாற்பத் தெட்டை
எய்துங்கால் மகிழ்ச்சியிலே வாழ்த்து கின்றோம்!

அபிராமி அந்தாதி நிறைவுக் கட்டுரை :

பார்வதி திருமணம்

டாக்டர் புலவர் திரு. K. சந்தானராமன் M.A. D., Lit., Ph.D., D. P. P. A., D, U. N., I. U,
பருத்தியூர்.

(1) பிரமனின் மகனை தட்சனைத் 'தட்சப் பிர்ஜாபதி' என்று அழைப்பர். அவன் இயற்றிய தவத்தின் பயனாய் அம்பிகையை மகளாகப் பெற்றான். அதனால் ஈசன் அவனுக்கு மருகமனும் ஆனான். பிறகு இறைவனை விலக்கி வேள்வியொன்றினை ஆணவமிக்க தட்சன் இயற்றினான். அவ்வேள்வியைக்காணச் சென்ற அன்னையினையும் அவமதித்தான். சிவநிந்தையினைக் கேட்டு வெகுண்ட அன்னை "தட்சனின் வேள்வியும் அழிக" எனச் சாபமிட்டுக் கயிலை திரும்பினாள்.

'சதிதேவி' என்பது அப்போது அவளது திருப்பெயர். சதிதேவியின் சீற்றத்திலிருந்து வந்த காளியும் இறைவனின் சீற்றத்திலிருந்து வந்த வீரபத்ர மூர்த்தியும் தட்சன் வேள்வியினை அழித்தனர். இறுதியில் தட்சன் தலையும் அறுபட்டது. தக்கன் ஆட்டுத்தலையினைப் பெற்று இறைவனைத்துதித்து நற்கதி பெற்றான்

சதிதேவி என்ற பெயர் காலப்போக்கில் மறைந்தது. அன்னையை அனைவரும் தட்சன் மகள் என்று பொருள் தரும் 'தாட்சாயணி' என்ற பெயராலேயே அழைத்தனர். அஃது அவளுக்கு மிக்க வேதனை அளித்தது.

"கற்பனை முதலிய கடந்த கண்ணுதல்
தற்பர! நினை இகழ் தக்கன் தன்னிடைப்
பற்பகல் வளர்ந்து அவன் பயந்த மாதெனச்
சொற்படு நாமமும் சுமந்துளேன் யான்."

என்று அவள் இறைவனிடம் முறையிட்டாள். தான் சுமையாகத் தாங்கி நிற்கும் அப்பெயரையும் திருமேனியினையும் விட்டுவிட விழைவதாய் உரைத்தாள்.

"உனது குழந்தைகளாகிய உயிர்களின் நலன் கருதியே நீ இங்ஙனம் எண்ணினாய். உன்னை மகளாகப் பெற வேண்டித் தவம்

புரியும் இமவானுக்குப் பெண்ணுகி, ஐந்து வயதானதும் எம்மை நோக்கித் தவம் புரிக'' என்றுன் இறைவன்.

அதன்படி சதிதேவி தாட்சாயணி என்ற வடிவினை விடுத்தாள். இமயமலைச் சாரலில் பொய்கையொன்றில் ஆயிரம் இதழ்கள் கொண்ட தாமரை மலரில் சிறு குழந்தை வடிவுடன் கிடந்தாள்.

" மெய்த்தவ மியற்றிய வெற்பன் காணிய
அத்தட மலருமோர் அரவிந்தத்தின் மேல்
பைத்த தோர் குழவியின் படிவத் துற்றனள்
எத்திறத் துயிரையும் ஈன்ற தொன்மையாள். "
— கச்சியப்பர்.

தவமியற்றியமலையரசன் தாமரை மலரில் கண்டகுழந்தையினை எடுத்துச் சென்று தன் மனைவி மேனையிடம் கொடுத்தான். இருவருமாய்க் குழந்தையைப் பேரன்புடன் வளர்த்தனர். "எல்லாக் காலத்திலும் எல்லாவுலகங்களையும் காக்கும் அம்பிகையை வளர்த்திடவும் இயலுமோ! வளர்ந்தது சழக்கே! " என்கிருர் கச்சியப்பர்.

ஐந்து வயதானவுடன் பார்வதி இறைவனை நோக்கித் தவமியற்றப் புறப்பட்டாள். இமவான், சிறுமிக்குத் தவம் வேண்டாமென்றுன், அவ்வாறு சென்ருல் இன்னல்கள் ஏற்படும் என்று கூறித் தடுத்தான். ஆனுல் பார்வதியோ,

" ஈசனை காப்பன் அல்லால் யாரையும் பிறராற்றம்மால்
ஆசறப் போற்றல் ஆகாது; அது துணிவாகும்; ஈண்டுப்
பேசிய திறனும் அன்னேன் பேரருள் மருதி யென்ன
நேசமோடு இயைந்திட்டு அன்னை நினைந்த நோன்பு இயற்று
கென்றுள். "

பார்வதி கடுந்தவம் இயற்றினுள். அதேநேரத்தில் இறைவன் தட்சிணுமூர்த்தியாகி ஞானேபதேசம் செய்தான். பசுக்களாகிய உயிர்கள் மும்மலங்களாகிய குற்றங்களை விடுத்துப் பதியாகிய இறைவனை அடைதலே உண்மையான மெய்ஞ்ஞானம் எனஉணர்த்தும் சின்முத்திரை காட்டினுன் இறைவன். சனகாதி முனிவர்கள் ஞானத் தெளிவு பெற்றனர்.

அன்னை தனியே தவமியற்ற, இறைவனே ஞானேபதேசம் செய்து கொண்டிருந்தான். சிவசக்தி பிரிந்திருந்ததால் அனைத்துலகும் இனப்பெருக்க மின்றி ஸ்தம்பித்தது. "ஆமையின் ஒடுங்கல் உற்றுர் ஆசையுற்றேர்கள் எல்லாம்'' என்றுர் கச்சியப்பர். இருவரையும் இணைத்துவைக்க எண்ணிய தேவர்கள் காமனை வேண்டினர். அவன் முதலில் மறுத்தான். பின்பு வலியுறுத்தலால் இணங்கினுன். இரதி தேவியுடன் கயிலை சென்று இறைவன்மீது தன்கணைகளை விடுத்தான்.

" விட்டவெம் பகழி ஐந்தும் வியத்தகு விமலன் மீது
பட்டலும் சிறிதே வேளைப் பார்த்தனன் பார்த்தலோடும்
கட்டழல் பொதிந்த நெற்றிக் கண்ணது கடிதே காமற்
சுட்டது; கயிலை முற்றும் சூழ்புகை பரவிற்றன்றே. "

— கச்சியப்பர்.

இறைவன் தானே பார்வதியின் தவச்சாலைக்குச் சென்றான். அவள் உறுதியினை மறையலன் வடிவில் சென்று சோதித்து அறிந்து மகிழ்ந்தான். பிறகு அவளுக்குத் தன்னுருக் காட்டினான். முறைப்படி வந்து கடிமணம் கொள்வதாகக் கூறிச் சென்றான்.

முனிவர்கள் எழுவரை அனுப்பி இமவானிடம் பெண்கேட்கச் செய்தான். இனிதெனமகிழ்ந்தான் இமவான். தட்சன் வரலாற்றினை நினைவிற்கொண்ட மேனை பெண்கொடுப்பதில் தயக்கம் காட்டினாள். ஆணவத்தால் தட்சன் அழிந்தானே அன்றி இறைவனின் பிழையன்று என்பதனை முனிவரர் தெளிவுபடுத்தினர். அவளும் தெளிந்தாள்.

பங்குனி உத்திரநாள் பார்வதியின் திருமணத்துக்கு ஏற்ற நாள் என்று குறிக்கப்பட்டது. ஆதி தம்பதியரின் திருமணம் காண அனைவரும் இமயத்தில் வந்து கூடிவிட்டனர். அதனால் பூமி சமநிலை இழந்து வடபுலம் தாழ்ந்தது. அதனைச் சமன்செய்ய அகத்தியரைத் தென்னாட்டுக்கு அனுப்பினான் இறைவன். பொன்னி, பொருநை நதிகளுடன் புறப்பட்ட அகத்தியர் பொதிகை வந்ததும் பூமிசமநிலை எய்தியது.

பார்வதிக்கு அனைத்து அணிகலன்களும் பூட்டி அலங்கரித்தனர். அதனால் அவ்வணிகலன்களே அழகு பெற்றன என்றது ஸ்காந்த புராணம். அம்மைக் கேற்ப அப்பனும் கல்யாண சுந்தரனாகப் பல் வேறு அணிகலன்களும்பூண்டு மணவறை எழுந்தருளினான். மங்கல இசையும் மறைமுழக்கமும் எங்கும் பரவிற்று. உலகத்து உயிர்கள் அனைத்தும் மகிழ்ச்சியால் பூரித்தன. வேதப் பிரமனே புரோகிதனாக இருந்து திருமண வேள்விகளை நடத்தினான். மேனை புனித நீரினை வார்க்க இமவான் இறைவனின் திருவடிகளைக் கழுவிமலர்கொண்டு அர்ச்சித்தான்.

" பூசனை புரிந்தபின் புவனமது ஈன்றாள் தன்கையை
பாசமதகன்ற தொல்சீர்ப் பரஞ்சுடர்க் கரத்துள் வைத்து
நேசமோடளித்தேன் என்னா நெடுமறை மனுக்கள் கூறி
வாசநல் உதகம் உய்த்தான் மருகன் என்று அவனை உன்னி "

" எங்குள பொருளும் கோளும் ஈதலும் தானே ஆகும்
சங்கரன் உலகமெல்லாம் தந்திடும் கன்னி தன்னை
மங்கலமுறையாற் கொண்டான் மலைமகள் கொடுப்பவென்றால்
அங்கவன் அருளின் நீர்மை ஆர் அறிந்து உரைக்கற் பாலார்?"

— கந்தபுராணம்.

அம்பிகையின் கரத்தைப் பரஞ்சுடர் கரத்துள் வைத்து "நேச மோடு அளித்தேன்" என்று கூறி இமவான் கொடுத்தான். இறைவனும் மங்கல முறையாற் கொண்டான். ஆதலால் அபிராமி அந்தாதியும் " கயிலாயருக்கு இமவான் அளித்த கனங்குழை" என்றது.

மணமக்களை அனைவரும் வணங்கி அருள் பெற்றனர். இரதி தேவியின் கணவனை அனங்கனைக இருக்கச் செய்து அருளினன் இறைவன். அகத்தியருக்குத் தான் முன்னரே கூறியபடி பொதிகை மலையிலேயே தனது திருமணக் கோலத்தைக் காட்டியருளினன். தொலைக்காட்சிக்கு முன்னோடிக் கருத்து இவ்வரலாற்றில் பொதிந் துள்ளது.

இறைவன் அவரவர்களுக்கு ஏற்ற வகையில் அருள் செய்து சிவகணங்களுடன் விடை யூர்தியில் ஏறி உமாமகேஸ்வரனைக் கயிலை எழுந்தருளினன். மண்ணில் நல்ல வண்ணம் நாம்வாழ்ந்திட அவன் பெண்ணின் நல்லாளொடும் இருந்தான். இதுதான் ஆதி தம்பதியரின் திருமண வரலாற்றுச் சுருக்கம்.

சைவ மகாபுராணம், கந்தபுராணம், தேவிபாகவதம், குமார சம்பவம் போன்ற பல நூல்களில் காணப்படும் இவ்வரலாறு வைணவ புராணமான ஸ்ரீமத் பாகவதத்திலும் கூட இடம் பெற்றி ருக்கிறது என்பதும் குறிப்பிடத் தக்கது.

வேண்டியவர்க்கு வேண்டியவற்றை வேண்டியபடி அளித்திடும் மங்கல வரலாறு தான் பார்வதி திருமணம்.

" தஸ்மாத் ஸர்வப்ரயத்னேன கல்யாணத்யாயம் உத்தமம்
ச்ருண்யுச்ச படேயுர்வா ஸர்வாபீஷ் டஸ்ய ஸித்தயே "

ஆகையால் இக்கல்யாண வரலாற்றினைத் தங்கள் தங்கள் கோரிக்கைகள் நிறைவேற, படிக்கவும் கேட்கவும் வேண்டும் என்கிறது ஸ்காந்த மகாபுராணம். அனைவரும் படித்தும் கேட்டும் பயன் பெறுவோமாக!

ஸ்ரீ உமா மகேஸ்வராய மங்களம்.

நன்றியுரை

சென்னை தியாகராய நகரில் உள்ள தருமை ஆதீனச் சமயப் பிரசார நிலையத்தில் 1979 - ஆம் ஆண்டு நவராத்திரி விழாவில் அடியனும், அடியேன் துணைவி திருமதி ஹேமா சந்தானராம னும், அபிராமி அந்தாதி தொடர்ச் சொற்பொழிவாற்றினேம். அதனைச் செவியுற்ற அப்போதைய தி. நகர் நிலையத் தம்பிரான் சுவாமிகள், அங்குக்கூறிய விளக்கங்கள் அனைத்தும் ஞான சம்பந்தத்தில் எழுதப்படவேண்டும் என்றருளினர்கள். அவர்கள் ஆற்றுப்படுத்த ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் தொடர்ந்து அருளாணை பிறப்பித்தார்கள்.

அதன்படி கடந்த நூற்றெட்டு மாதங்களாக, ஞானசம்பந்தத் தில் அபிராமி அந்தாதி விளக்கப் பேருரை இடம்பெற்று இனிதே நிறைவு பெற்றது. சமயச் சான்றோர்களும் தமிழ்ப் பேரறிஞர்களும் பெரிதும் பாராட்டி ஊக்குவித்தனர். ஞானசம்பந்தர் தோன்றிய கௌண்டிண்ய கோத்திரத்தில் பிறந்த பாக்கியமே எளியேனையும் சமய உலகில் ஈடுபடுத்தியிருக்கிறது. ஆளுடைப்பிள்ளையின் பெயரால் விளங்கும் 'ஞானசம்பந்தம்' இதழில் இவ்வுரை வெளி வாய்த்ததும் அக்காரணத்தின் பயனே எனக் கருதுகிறேன்.

குருஞானசம்பந்தரின் திருநாமத்துடன் ஞானச்செங்கோல் ஓச்சும், தட்சிணாமூர்த்திவடிவான ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் திருவடிகளில் எனது வணக்கத்தையும் நன்றியையும் சமர்ப்பிக் கிறேன்.

ஞானசம்பந்தம் ஆசிரியர் குழுவிற்கும், அச்சகத்தாருக்கும், அவ்வப்பொழுது ஆலோசனைகள் வழங்கியவர்களான திருவாளர்கள் வி. சா. குருசாமி தேசிகர், பேராசிரியர் இரா. செல்வக்கணபதி ஆகியோருக்கும் எனது உளமார்ந்த நன்றி.

வாசகப் பெருமக்களின் பேராதரவிற்கும் பாராட்டுதல்களுக்கும் இதயங்கனிந்த இருகரங்கூப்பிய நன்றி. வணக்கம்.

திருச்சிற்றம்பலம்

இங்ஙனம்,

கு. சந்தானராமன்.

கட்டுரை எண். 12.

போதமும் சித்தியும்

டாக்டர். திரு. மு. சிவச்சந்திரன்

சிவஞானபோதத்தின் முதல் சூத்திர இரண்டாம் அதிகரணம் கூறிய கருத்துக்கள் நிரல்படச் சிந்திக்கப்பெற்றன. இனி, சித்தியார், முதல் சூத்திரத்தின் இரண்டாம் அதிகரணத்தில் கூறியுள்ள கருத்துக்களைச் சிந்திக்கலாம்.

சித்தியாரின் முதல் நூற்பாவிலுள்ள, "தான் முதல் ஈறுமாகி அநாதி முத்த சித்துரு மன்னி நின்று மருவிடும்" என்னும் ஈற்று வரியே இரண்டாம் அதிகரணமாக விளக்கப்படுகிறது. இத் தொடரை இரண்டு பிரிவுகளாக எடுத்து விளக்குகின்றார் ஆசிரியர். 1. "தான் முதலாகி அநாதி முத்த சித்துருமன்னி நின்றுமருவிடும்" 2. "தான் ஈறுமாகி அநாதி முத்த சித்துருமன்னி நின்று மருவிடும்" என்பன அவை. முதல்பிரிவில் 5 செய்திகள் விளக்கப்பெறுகின்றன.

1. உலகத் தோற்றத்திற்குச் சிவபெருமான் நிமித்தகாரணன்.
2. சிவன் உலகத்தைத் தோற்றுவிக்கும் முறைமை.
3. சுத்தப் பிரபஞ்சமாகிய வாக்குக்களும் அவற்றின் இயல்புகளும்.
4. சுத்தாசுத்த அசுத்தப் பிரபஞ்சத்தின் இயல்பு.
5. முதல்வன் சித்துரு மன்னி நின்று மருவிடும் முறைமையும் அதுபற்றித் தொடக்குறும் முறைமையும் என்பன அவ் ஐந்து.

இரண்டாம் பிரிவிலும் ஐந்து கருத்துக்கள் தெளிவு படுத்தப் பெறுகின்றன.

1. ஒடுங்கியஉலகத்தைச் சங்காரக்கடவுளே தோற்றுவிப்பன்.
2. முத்தொழிலும் செய்தல்பற்றி முதல்வன் விகாரியாகான்.
3. முத்தொழிலும் செய்யும் உரிமை சங்காரகாரணனுக்கே யுரியது.
4. முத்தொழிலும் செய்தற்குக் காரணம்.
5. ஐந்தொழிலும் அருட்செயல்.

இனி முதல் பிரிவிலிருந்து முறையாகக் கருத்துக்களைக் காண்போம்.

உலகத்தோற்றத்திற்குச் சிவபெருமான் நிமித்தகாரணன்

உலகமாகிய காரியத்திற்கு வேண்டப்பெறும் காரணங்கள் மூன்றும். அவை: 1. முதற்காரணம். 2. துணைக்காரணம். 3. நிமித்தகாரணம். பானை எனும் காரியப்பொருள் உருவாக மண் முதற்காரணம் ஆகவும் திரிகை துணைக்காரணமாகவும் குலாலன் நிமித்தகாரணம் ஆகவும் இருத்தலைப்போல உலகமாகிய காரியப் பொருளுக்கு மாயை முதற்காரணமாகவும் சிவசக்தி துணைக் காரண மாகவும் சிவபெருமான் நிமித்த காரணமாகவும் இருந்து ஆள்கின்றான். இக்கருத்துக்களை,

" காரிய காரணங்கள் முதல்துணை நிமித்தம் கண்டாம்
பாரின்மண் திரிகை பண்ணுமவன் முதல் துணை நிமித்தம்
தேரின்மண் மாயை யாகத் திரிகைதன் சத்தியாக
ஆரியன் குலாலனாய் நின்று ஆள்குவன் அகிலமெல்லாம்"

என்னும் விருத்தத்தில் விளக்குகின்றார். ஈண்டு மாயை என்பது சுத்தமாயை. 'அகிலமெல்லாம்' என்றதனால், சுத்தம், சுத்தா சுத்தம், அசுத்தம் என்னும் மூன்று காரியப் பிரபஞ்சங்களையும் குறித்தார்.

சிவபெருமான் உலகத்தைத் தோற்றுவிக்கும் முறைமை :

முதல்காரணம் எனப்பட்ட சுத்தமாயையினின்றும் அசுத்த மாயை விருத்தியாகி அவ் அசுத்தமாயையினின்றும் பிரகிருதி மாயை தோன்றும். சுத்தமாயையினின்றும் வைகரி முதலிய நான்கு வாக்குகளும் அசுத்தமாயையினின்றும் அராகம் முதலிய காரணதத்துவங்கள் ஐந்தும் பிரகிருதி மாயையினின்றும் குண தத்துவம் எனப்படும் போக்கிய தத்துவம் இருபத்து நான்கும் தோன்றும் என்றும் இவை பரமசிவனது சத்திவடிவச் சந்நிதியி னின்றும் செயல்பாடு பெறும் என்றும் ஆசிரியர் கூறுகின்றார்.

" விந்துவின் மாயை யாகி மாயை யின் அவ்வியத்தம்
வந்திடும்; விந்தும் தன்பால் வைகரி யாதி; மாயை
முந்திடும் அராகம் ஆதி; முக்குணமாதி மூலம்
தந்திடும்; சிவன வன்தன் சந்நிதி தன்னின் நின்றே "

என்னும் பாடலின் மூலம் மேற்காணும் கருத்துக்கள் விளக்கப் பெறுகின்றன. விந்து என்பது சுத்தமாயை. மலகன்மங்களோடு விரவாது சுத்தமாயிருப்பது ஆதலின் சுத்தமாயை எனப்பெற்றது. ஈண்டு 'மாயை' என்பது அசுத்தமாயை. இது மலகன்மங்களோடு விரவி அசுத்தமாயிருப்பது. 'அவ்வியத்தம்' என்பது அசுத்தமாயையி னின்றும் தூல பரிணமமாய்த் தோன்றும் பிரகிருதி மாயை ஆகும்.

அவ்வியத்தம் – வெளிப்படாதது என்பதுபொருள். முக்குணங்களும் வெளிப்பட்டுத் தோன்றுதிருத்தலால் பிரகிருதி மாயை அவ்வியத்தம் எனப்பெற்றது. இம்மூன்று மாயைகளும் காரணங்களாய் இருத்தலின் இவற்றினின்று தோன்றும் உலகமும் சுத்தப்பிரபஞ்சம், சுத்தாசுத்தப்பிரபஞ்சம், அசுத்தப் பிரபஞ்சம் எனப்பெயர் பெற்றன. சுத்தமாயையிலே நாதமும் நாதத்திலே விந்துவும் விந்துவினின்று சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரி என்னும் நான்கு வாக்குகளும் தோன்றும். இவை சுத்தப்பிரபஞ்சம்.

காலம், நியதி, கலை, வித்தை, அராகம் என்னும் ஐந்து தத்துவங்களும் அசுத்தமாயையிலே தோன்றும். இத்தத்துவங்கள் ஐந்தும் அசுத்தமாயையினின்று பிரகிருதி மாயை தோன்றுவதற்கு முன்னர்த் தோன்றுவன ஆதையால் பாடலில், "முந்திடும்" என்று குறித்தார். இவை சுத்தாசுத்தப் பிரபஞ்சம்.

பிரகிருதி மாயையினின்றும் தோன்றும் தத்துவங்கள், குண தத்துவம், அதாவது சித்தம், மற்றும் புத்தி, அகங்காரம், மனம் எனும் மூன்று அந்தக்கரணங்களும ஞானேந்திரியம் ஐந்தும், கன்மேந்திரியம் ஐந்தும் தன்மாத்திரை ஐந்தும் பூதங்கள் ஐந்தும் என இருபத்து நான்காகும். இவை அசுத்தப் பிரபஞ்சம்.

பரமசிவன் ஐந்தொழில்களும் செய்யுஞ் பொருட்டுச் சத்தியாகிய அருள் திருமேனி கொண்டு தாமே சுத்தப்பிரபஞ்சத்தையும், அநந்த தேவை அதிட்டித்து நின்று சுத்தாசுத்தப் பிரபஞ்சத்தையும் சீகண்டரை அதட்டித்து நின்று அசுத்தப்பிரபஞ்சத்தையும் காரியப் படுத்துவர் என உணர வேண்டும். (தொடரும்)

கடிதம்

R. நமசிவாயம் ஸ்ரீவைகுண்டம்,
9—11—88.

மதிப்புக்கும் மரியாதைக்கும், உரிய ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானத்தின் பொற்கமலபாதங்களுக்கு, பணிந்து அடியேன் நமசிவாயம் எழுதுவது,

தீபாவளித் திருநாளாகிய நேற்றுத்தங்களின் அருளுரையை வானொலி மூலமாகக் கேட்கும் பாக்கியம் அடியேனுக்கும், எனது குடும்பத்தாருக்கும் கிடைத்தது. நான்கு ஐந்து மாதங்களுக்குப்பின் தங்களின் குரலை நல்லநாளின் காலையில் கேட்டோம். பரவசம் அடைந்தோம். தங்களுக்குக் கடிதத்தின் மூலம் எழுதி எனது மகிழ்ச்சியைப் பெருக்கிக் கொள்ள நினைத்து எழுதுகிறேன். தவறு இருப்பின் மன்னித்தருளுக. தஞ்சை மாவட்டதைவிட்டு நெல்லை மாவட்டம் வந்தாலும், நானும் எனது குடும்பத்தாரும் அந்த இனிய சூழ்நிலையை, தங்கள் தரிசனத்தை என்றும் மனதில் நினைத்துப் பூரிப்பு அடைகிறோம்.

அப்பர் வழங்கிய ஆன்மீகச் செல்வம்

டாக்டர் இரா. செல்வக்கணபதி,
எம். ஏ., பி. எட்., பிஎச். டி.,

(மலர் 47, இதழ் 12, பக்கம் 643 இன் தொடர்ச்சி.)

சமயத்துறையில் இறைவன் திருவருளைப் பெறுவதற்குரிய வாயில் எதுஎன்ற வினவிற்கு அப்பரடிகள் தரும் விளக்கம் நம்மைச் சிந்திக்க வைக்கின்றது. சிவலிங்க வழிபாட்டை எப்படி எங்கே எவ்வாறு நிகழ்த்துவது என்பதற்கு அப்பரடிகள் சிவாலயத்தையும் சிவலிங்கத்தையும் அபிடேக ஆராதனைகளையும் வற்புறுத்துகின்றார். ஆனால் நாம் நினைப்பதுபோலல்லாமல் வேறு வகையாக அவர் விளக்கம் அமைகின்றது. ஈசனுக்குப் பூசனை புரியவேண்டுமா? கற்கோயில் நாடி அலையாதீர்கள்! உங்கள் உடம்பையே ஆலயமாக்கிக் கொள்ளுங்கள். வழிபாடு நடத்தும் பக்தன் உங்கள்மனம் தான். நீராட வேண்டுமா நதிகளை நோக்கி ஓடாதீர்கள்; வாய்மை என்ற நீரிலே மூழ்கி எழுங்கள். உங்கள் அகமனத்துள்ளுறையும் ஆன்மாவைச் சிவலிங்கத் திருமேனியாகக் கொள்ளுங்கள். அபிடேக ஆராதனைகளுக்கு வெளியில் வேறு எதனையும் தேடிஓடாதீர். நேயம் எனப்படும் அன்பினையே நெய்யாகவும், பாலாகவும், தூயநீராகவும் கொண்டு பொருந்த அபிடேகம்செய்யுங்கள். இந்த அகப்பூசனைக்கு ஈடான பூசனை உலகில் வேறு இல்லை என்கிறார் அப்பரடிகள்.

" காயமே கோயிலாகக் கடிமனம் அடிமையாக
வாய்மையே தூய்மையாக மனமணி இலிங்கமாக
நேயமே நெய்யும்பாலா நிறையநீர் அமைய ஆட்டிப்
பூசனை ஈசனார்க்குப் போற்றவிக் காட்டினோமே "

சமயத்துறையில் புறப்பூசைகளெல்லாம் உன்னையே நீ கோயிலாக்கிக் கொள்வதற்கான எண்ணத்தை உருவாக்கவே. மனிதர்கள் நடமாடும் கோயில் நம்பர்கள் ஆதல்வேண்டும். வாய்மையும், அன்பும் வளர்ந்து ஓங்கும்போது இறைவன் உன் உள்ளத்தி லிருந்தே வெளிப்படுவான் என்பது சமயத்துறையில் அப்பரடிகள் காட்டும் புரட்சிகரமான வழிமுறைகளாக அமைகின்றன. மனிதனின் உயர்குணவளர்ச்சியே உன்னதமான சமயம் என்ற மதிப்பீடு ஆன்மீகத் துறையில் ஒரு புதிய தடமாக அமைகிறது.

வழிபாடு நிறைவுற்ருயிற்று, சிவகதி என்ற பெரும்பேறு எப்போது வாய்க்கும் என்று வினவுவார்க்கு அப்பரடிகள் விடை சொல்கின்ருர். ஓர் உயரிய விளைவைப் பெற ஓர் உழவன் மேற் கொள்ளவேண்டிய உன்னதமான முயற்சிக் கூறுகளையெல்லாம் உருவகமாக்கிச் சமயத்துறையில் ஒருபுதிய தடம் காட்டுகின்ருர்.

உழுதல், விதைத்தல், களைநீக்குதல், நீர் பாய்ச்சுதல், வேலி யமைத்தல் என்பன முறையாக அமைந்தால் விளைவு நிச்சயமாகும். இங்கே சிவனருள் என்ற விளைவைப்பெற எவ்வெவ்வாறு முயல வேண்டும் என்கிறது ஒரு அழகிய தேவாரத்திருப்பாட்டு.

''மெய்ம்மையாம் உழவைச்செய்து விருப்பெனும் வித்தை வித்திப்
பொய்ம்மையாம் களையைவாங்கிப் பொறையெனும் நீரைப்
தம்மையும் நோக்கிக் கண்டுதகவெனும் வேலிஇட்டுச் [பாய்ச்சித்
செம்மையுள் நிற்பராகில் சிவகதி விளையுமன்றே''

நெஞ்சத்தை மெய்ம்மையால் உழவேண்டும். திருவருளை அடைந்தே தீருதல் வேண்டும் என்ற பக்தி வைராக்கியத்தை விதையாகப் பாவவேண்டும். மெய்ம்மை உழவு செய்யும் போதே வேரற்றுவிடும் பொய்ம்மைக் களைகளை முற்ருக நீக்கவேண்டும். எதனையும் தாங்கி நிற்கும் பொறுமை என்னும் நீரை நாள்தோறும் பாய்ச்ச வேண்டும். தகுதிப்பாடு எனப்படும் நல்லொழுக்கங்களால் வேலி அமைத்தல் வேண்டும். அத்தனையும் செய்து செம்மை எனப்படும் உயர்பண்பில் தலை நிற்பாராஞல் சிவகதி என்னும் பயிர் தாமே விளையும்.

மனித மனவளர்ச்சியிலும், மனிதப்பண்புகளின் வளர்ச்சியிலும் அப்பரடிகளுக்குத்தான் எவ்வளவு பெரிய நாட்டம்!

செய்வன செய்து தவிர்வன தவிர்த்து வாழும் நெறியான வாழ்வை இம்மையில் மேற்கொள்ளுதலே போதுமானது. இறையருள் என்பது எங்கிருந்தோ வருவது அன்று. அது உன்னுள் தோன்றி உருப்பெற்று மலர்வது என்ற அப்பரடிகளின் கூற்று, சமயத்துறையில் முற்றும் புதிய சிந்தனையாக அமைகின்றது.

அப்பரடிகள் காட்டிய மனித மனவளர்ச்சி நெறியை விட்டு அறிவே துணையாக ஆண்டவனை அடைந்துவிட முயல்வார்க்கு அது இயலாது என்று அவர் எச்சரிக்கையும் செய்கிருர். சிலர் மனமே துணையாக அறிவினைப் பெரிதென்றெண்ணி வாழ்க்கைப் பயணத்தைத் தொடங்கியும் விடுகின்றனர். கடும்சினம் நிறைந்த பாரம் என்ற படகு ஐம்புல ஆசை என்ற பாறைமேல் மோதும்போது எல்லாமே இல்லாதுபோய் விடுகின்றது. எவ்வளவு அழகான உருவகம்!

"மனம் எனும்தோணியற்றி மதியெனும் கோலையூன்றிச்
சினம் எனும் சரக்கையேற்றிச் செறிகடலோடும்போது
மதனெனும் பாறைதாக்கி மறியும்போதறிய வொண்ணது
உனையெனும் உணர்வை நல்காய் ஒற்றியூர் உடையகோவே"

மனிதப்பண்புகள் வளர்ச்சி பெருதபோது அறிவேதுணையாகக் கொண்டு தொடங்கப்படும் வாழ்க்கைப் பயணம் இடையிலே இற்று அழிந்துவிடும் என எச்சரிக்கின்றார். இறை உணர்வு என்பது ஒருபற்றுக்கோடு. மனிதப்பண்பின் வளர்ச்சியே வெற்றியை அடைவதற்குரிய வாயில். அறிவே எல்லாவற்றையும் சாதிக்கப்போதுமானது என்பார்க்கு ஓர் எச்சரிக்கையாக அமைகிறது இவ் அழகிய திருப்பாட்டு.

அப்பரடிகள் வழங்கிய ஆன்மீகச் செல்வம் மக்கள் இனத்தை எல்லாம் ஈடேற்றும் உன்னதமானது. அவர்தம் வாழ்வாலும் வாக்காலும் உணர்த்திய இறைமை சார்ந்த அறநெறிக் கோட்பாடுகளே இங்கே ஆன்மீகச் செல்வம் என ஆராய்ந்து காட்டப்பட்டது.

கி. பி. 7 ஆம் நூற்றுண்டில் தமிழகம் தன் பண்டைப் பெருமைகளை எல்லாம் இழந்து நின்ற நேரத்தில் விடிவெள்ளியாக அவதரித்த பேரருளாளர் அப்பரடிகள். மன்னன் தவறிழைத்த காலை ஒரு தனிமனிதர் அரசுக்கெதிராகப் போர்க்கொடி உயர்த்திய தீரம் சமயம் சார்ந்த ஒருசமூகப் புரட்சியாகவே கருதப்பட்டது. சைவம் என்பது வெறும் சடங்குச் சமயமன்று. அது உன்னதமான உயர்கோட்பாடுகளைக் கொண்டது என்பதை முதன்முதலாக எடுத்துக்காட்டிய பெருமை அப்பரடிகளுக்கேஉண்டு. அப்பரடிகளின் உன்னத வாழ்வில் தொண்டு என்பதே தலையாயது. இறைவன் பெயரால் மக்களினத்திற்குச் செய்யும் உயர்பணிக்கு வித்திட்டவரும் அவரே. பகைமேகம் சூழுங்காலை அதனை எதிர்த்துப் போராடுதல் வேண்டும். அப்போராட்டம் இரத்தம் சிந்தாமல் சாத்விகப் போராட்டமாதல் வேண்டும் என்று வற்புறுத்தித் தனிமனிதர் சத்தியாக்கிரகத்தை உண்ணுநோன்பால் சாதித்துக் காட்டிய முதல்வரும்அவரே. சாதிகுலம் எனச் சாத்திரம் பேசி மக்களை வேறுபடுத்த முனைந்தாரைச் சாடி ஓர் இறைவன் பெயரால் மக்களினம் ஒன்றுபடல் வேண்டுமென முதல் முழக்கமிட்ட பெருமையும் அப்பரடிகளுக்கே உரியது.

இறைவனை நாடிக் கோயிலுக்குப் போவதை விடுத்து உன்னையே ஒரு நடமாடும் கோயிலாக்கிக் கொள் என்று வற்புறுத்தியவரும் அவரே. சிவகதியாகிய விளைவைப் பெற

மெய்ம்மை உழவு முதலாயவற்றை மேற்கொள்ள வேண்டுமெனத் தனிமனித உள்ள வளர்ச்சியை உருவகத்தால் சுட்டிக் காட்டிய சிறப்பும் அப்பரடிகளுக்கே உரியது.

இந்திய தத்துவச் சிந்தனைகளுள் காலத்தால் மூத்தசிந்தனை அப்பரடிகள் வழங்கிப்போந்தது. இறைவன்பெயரால் உலகத்தவர்களையெல்லாம் ஒன்றுபடுத்தும் பேதமற்றபெருநெறி அப்பரடிகளின் தனிநெறி! அங்கே சாதி குலம் இல்லை. ஏற்றத்தாழ்வுகளில்லை. அன்பும், மனிதநேயமுமே கடவுள். மனித மனவளர்ச்சியும், பண்பாட்டின்முதிர்ச்சியுமே உன்னதமான சமயத்தின் பெருநெறிகள் தான் கண்ட பெருநெறித் தலைவனுக்கு அவர் சிவம் எனப் பெயரிட்டார். வேறுபடப் பிறர் கூறினும் தமக்கு அதுவும் உடன்பாடே என நேசக்கரம் நீட்டினர்.

இந்த உன்னத ஆன்மீகப் பெருநெறியை விலைமதிப்பற்ற செல்வங்களாக நமக்கு வழங்கியவர் அவர். இத்தகு உன்னதச் செல்வத்தைப் போற்றிப் பாதுகாப்பதும் உலகவர்களுக்கெல்லாம் வழங்குவதும் தமிழரின் தலையாய கடமையாகிறது.

கடிதம்

ஆன்மா. வீ. கோ. மேலப்பாதி,
22—11—88.

தெய்வத் திருவடிகளுக்கு வணக்கம்!

'நல்லாரைக் காண்பது, நல்லார் சொல் கேட்பது, நல்லார் பற்றிப் பேசுவது, நல்லாருடன் சேர்வது நன்று,' என்று ஔவையார் கூறினர்.

தங்கள் தரிசனம் கிடைத்தது. தங்கள் ஆசியுரை காதில் கேட்டது. தங்களைப் பற்றிப் பேசுவதுதான் மகிழ்ச்சி தருகிறது. தங்களுடன் சேரும் நாள்தான் சிவன்தான் தருவாரோ. அவர் கட்டளை கிடைக்கும் என நம்புகிறேன்.

தங்கள் ஆசியுரையைச் செம்பனூர் கோவில் திருச்சிவப்பள்ளி குமரகோவில் கும்பாபிஷேகத்தில் நாங்கள் கேட்டோம். இருவரும் (கணவனும், மனைவியும்) வேலைக்கு செல்வது பற்றித் தாங்கள் கூறியதும் எங்களுக்கு மகிழ்ச்சியைத் தந்தது.

பாலொத்த மென்மொழியாளும் — — உமை நங்கையும்

திரு. N. சேதுராமன், B. Sc., D. M. I. T.,
கும்பகோணம்.

திருவாரூர்ப் பெரிய கோயிலுக்குள் தேவாரப் பாடல் பெற்ற தலங்கள் இரண்டு உள்ளன. முதலாவது, பூங்கோயில் எனப்படும் மூலஸ்தானம் உடையாரின் கோயிலாகும். இறைவன் வன்மீக நாதர், புற்றிடங்கொண்டார் என்று அழைக்கப்படுகின்றார். புற்று உருவத்தில் இறைவன் காட்சி அளிப்பதால் இது ப்ருதுவித் தலமாகும். இக்கோயில் கிழக்குப் பார்த்த சந்நிதியை உடையது. இரண்டாவது தேவாரத்தலம் ஆலயத்தின் தென் பிராகாரத்தில், கிழக்கில், மேற்கு நோக்கி இருக்கும் திருஅரநெறி எனப்படும் கோயிலாகும். இவ்விரு தேவாரத் தலங்களும் மூவர் முதலிகளின் காலத்தில் செங்கல் தளிகளாக இருந்தன. இராஜராஜசோழன் காலத்தில் கி. பி. 992-இல் செம்பியன் மாதேவியாரால் கற்றளிகளாகக் கட்டப்பட்டன. புற்றிடங் கொண்டாராகிய மூலஸ்தானம் உடையாரை மூவர் முதலிகள் தங்கள் பதிகங்களில் சிறப்பித்துப் பாடி உள்ளனர். இப்பதிகங்கள்வருமாறு; சம்பந்தரின் பதிகங்கள் 5, அப்பரின் பதிகங்கள் 19, சுந்தரரின் பதிகங்கள் 7, திருஅரநெறிக் கோயிலுக்கு அப்பர் பெருமானின் பதிகங்கள் இரண்டு உள்ளன.

மூவர் முதலிகளின் காலத்தில் அன்னைக்கு என்று தனிக் கோயில்கள் இல்லை. சோழமன்னர்களின் காலத்தில் இறைவிக்குத் தனிக் கற்றளிகள் எடுக்கப்பட்டன. திருவாரூர் ஆலயத்தில் இரண்டு தேவார பாடல்பெற்ற தலங்கள் உள்ளதால் இரண்டு அம்மன்கோயில்களைக் கட்டினர். இவைகளைக் கல்வெட்டுகள் மூலம் அறியலாம்.

முதல் பிராகாரத்துக் கிழக்குச் சுவரில் காணப்படும் கல்வெட்டு இரண்டாம் இராஜாதிராஜ சோழனுடைய பத்தாம் ஆட்சி ஆண்டில் வெட்டப்பட்டது. இதில் மீன மாதம், வளர்பிறை, திரயோதசி, மகநட்சத்திரம், செவ்வாய்க்கிழமை ஆகிய பஞ்சாங்கக் குறிப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன. இதன் காலம் கி. பி. 1176, மீன (பங்குனி) மாதம் 2-ஆம் தேதி செவ்வாய்க்கிழமை ஆகும். உடையார் திருவாரூர் ஸ்ரீ மூலஸ்தானம் உடையார் கோயில் திருக்காமக்கோட்டமுடைய பெரிய நாச்சியார் கோயிலில் பாலொத்த மென்மொழி நாச்சியாருக்குநிலங்கள் அளிக்கப்பட்டதைக் கூறுகின்றது. எனவே மூலஸ்தானம் உடையாரின் தேவியார் பெரிய நாச்சியார் என்பதையும் இத்தேவியாரின் பெயர் பாலொத்த மென்மொழி நாச்சியார் என்பதையும் அறியலாம். இப்பெயரை அப்பர் பெருமானின் பதிகத்தில் காணலாம்.

"சூலப் படையானைச் சூழாக வீழருவிக்
கோலத்தோட் குங்குமஞ்சேர் குன்றெட் டுடையானைப்
பாலொத்த மென்மொழியாள் பங்கனைப் பாங்காய
ஆலத்தின் கீழானை நான் கண்ட தாரூரே" (4—19—1)

மேற்கண்ட பாடலில் ஆரூர்ப் பெருமானின் தேவியாரின் பெயர் பாலொத்த மென்மொழியாள் என்று சொல்லப்பட்டுள்ளதை நன்கு நோக்க வேண்டும். திருநாவுக்கரசரின் பாடலில் அமைந்துள்ள பாலொத்த மென்மொழியாள் என்ற பெயர் மூலஸ்தானம் உடையாரின் தேவிக்கு வைக்கப்பட்டுள்ளதையும் அவ்வன்னையின் கோயில் திருக்காமக்கோட்டத்துப் பெரிய நாச்சியார் என்று அழைக்கப்பட்டதையும் கல்வெட்டுத் தெளிவாகக் கூறுகிறது. (இக் வெட்டு 1904-இல் திருவாரூர் சாசனஎண் 540 ஆகப்படியெடுக்கப் பட்டது. 1964-இல் தென்னிந்திய சாசனத்தொகுதி 17-இல் சாசன எண்585-இல் கல்வெட்டின் முழுவாசகமும் வெளியிடப்பட்டுள்ளது. பாலொத்த மென்மொழி நாச்சியார் என்ற பெயரைத் தவறாக பரலோக... மென்மொழி நாச்சியார் என்று பதிப்பித்துள்ளனர் 1988-ஏப்ரல் மாதத்தில் திருவாரூர்க் கோவில் கும்பாபிஷேகம் நடந்தேறியது. இவ்விழாவினை ஒட்டித் திருவாரூர்த் திருக்கோயில் என்னும் புத்தகத்தை வெளியிட்டுள்ளார்கள். இந்நூலில் பக்கம் 91-இல் பரலோக... மென்மொழி நாச்சியார் என்ற தவறான பெயரையே வெளியிட்டுள்ளனர். தேவாரப் பாடலையும் கல்வெட்டையும் ஒப்பு நோக்காததால் இத்தவறு ஏற்பட்டது. பாலொத்த மென்மொழி நாச்சியார் என்ற பெயரே கல்வெட்டில் சொல்லப் பட்டுள்ளது.)

முதல் பிராகாரத்து வாயிலில் வலப்புறத்தில் காணப்படும் ஒரு கல்வெட்டு மூன்றாம் குலோத்துங்க சோழனுடைய எட்டாவது ஆட்சிஆண்டில் வெட்டப்பட்டது. இதன் காலம் கி. பி. 1186 ஆகும். இக்கல்வெட்டிலும் ஸ்ரீ மூலஸ்தானம் உடையாரின் திருக்காமக் கோட்டமுடைய பெரிய நாச்சியாரின் கோயில் குறிப்பிடப் பட்டுள்ளது. (தென்னிந்திய சாசனம் தொகுதி 17 எண் 582)

முதல் பிராகாரத்து நுழைவு வாயிலில் வலப்புறத்தே காணப் படும் கல்வெட்டு ஒன்று-முதல் குலோத்துங்க சோழனின் 44-வது ஆட்சிஆண்டில் வெட்டப்பட்டது. இதன் காலம் கி. பி. 1114 ஆகும். உலகு உய்யக் கொண்ட காமக்கோட்டத்து எழுந்தருளியிருக்கும் உமைநங்கைக்கு அளிக்கப் பட்ட நிவந்தங்கள் கூறப்பட்டுள்ளன. (தென் இந்திய சாசனம் தொகுதி 17 எண் 586) எனவே இக் கோயிலில் இரண்டாவதாக ஓர் அம்மன் கோயில் இருந்ததையும் அதில் எழுந்தருளியிருக்கும் அன்னையின் பெயர் உமைநங்கை என்பதையும் அறியலாம். இப்பெயரை அப்பர் பெருமானின்

திருஅரநெறிப் பதிகத்தில் காணலாம் " எத்தீப் புகினும் " என்று தொடங்கும் பதிகத்தில் பாடல் 7 - இல் இப்பெயர் வருகிறது.

" கூடவல் லார்க்குறிப் பில்உமை யாளொடும்
பாடவல் லார்பயின் றந்தியுஞ் சந்தியும்
ஆடவல் லார்திரு வாரூ ரரநெறி
நாடவல் லார்வினை வீட வல்லாரே " (4-17-7)

மேலே உள்ள பாடலில் சொல்லப்பட்டிருக்கும் உமையாள் என்ற பெயரே கல்வெட்டில் உமைநங்கை என்று கூறப்பட்டுள்ளது. இவ்வுமையாள் ஆரூர் திருஅரநெறிப் பெருமானின் தேவியார் என்பதை அப்பர் பெருமான் கூறுகின்றார். எனவே அப்பர் பெருமானின் பாடல்களையும் சோழர்காலக் கல்வெட்டுகளில் சொல்லப்பட்டுள்ள பெயர்களையும் ஒப்பு நோக்கினால் கீழ்க்கண்ட உண்மைகளை அறியலாம்.

1. மூலஸ்தானம் உடையாரின் தேவியாரின் பெயர் பாலொத்தமென்மொழி நாச்சியார் என்பது ஆகும். இவ்வன்னையின் கோயில் திருக்காமக்கோட்டம் உடைய பெரிய நாச்சியார் கோயில் என்று அழைக்கப்பட்டது.

2. திருஅரநெறிப் பெருமானின் தேவியாரின் பெயர் உமையாள் என்பது ஆகும். இவ்வன்னையை உமைநங்கை என்று கல்வெட்டும் குறிப்பிடுகின்றது. இவ்வன்னையின் கோயில் உலகு உய்யக் கொண்ட திருக்காமக்கோட்டம் என்று அழைக்கப்பட்டது.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு அம்மன் கோயில்களையும் இன்று திருவாரூர் ஆலயத்தில் காணுவதற்கு இல்லை. கால வெள்ளத்தில் இவ்விரு அம்மன் கோயில்களும் மறைத்து போயினவா? தெரியாது. பாலொத்த மென்மொழியாளும், உமை நங்கையும் (கற்சிலைகள்) எங்கு மறைந்தனர்? தெரியாது; ஆம்! தெரியாது, தெரியாது, தெரியாது, ...

இன்றைய நிலை என்ன? அன்னைக்குஎன்று இரண்டுகோயில்கள் இருக்கின்றன. இவை 16 அல்லது 17-ஆம் நூற்றுண்டுக்குப் பிற்பட்ட திருப்பணிகளாகும். இரண்டாம் பிராகாரத்தில் வடபுறம் தெற்கு நோக்கி அன்னையின் கோயில் ஒன்று அமைந்துள்ளது. பிராகாரச் சுவரை ஒட்டியும், கல்வெட்டுக்களை மறைத்தும் இக் கோயில் கட்டப்பட்டிருப்பதால் இது பிற்காலத் திருப்பணி என்பதை அறியலாம். கட்டிடக்கலையும் பழமையை எடுத்துக்காட்ட வில்லை. அன்னையை அல்லியங்கோதை (நீலோத்பலாம்பாள்) என்று அழைக்கின்றனர். இப்பெயரைத் திருஞானசம்பந்தரின் பதிகத்திலும், 11ஆம் திருமுறையில் சேரமான் பெருமாளின் பதிகத்திலும் காணலாம். ஆனால் அல்லியங்கோதை என்ற பெயருக்கு ஏற்ப அன்னையின் உருவம் அமையவில்லை. அன்னையின் இடப்புறம் ஒரு தோழியின் தோளில் முருகப்பெருமான் பாலகனாக அமர்ந்துள்ளார். அன்னை தனது இடதுகையால் முருகப்பெருமானைத் தொட்டுக்கொண்டும், வலதுகையில் ஓர்மலரை ஏந்தியும்உள்ளாள்.

அன்னைக்கு இரண்டு திருக்கரங்களே உள்ளன. இவ்வன்னையின் திரு உருவம் எந்தக் கருத்தின் அடிப்படையில் வைக்கப்பட்டது என்பதும் தெரியாது. அறிந்த ஆய்வாளர்கள் உளரேல் அவ்வுண்மையை வெளிப்படுத்தக் கேட்டுக்கொள்கிறேன்.

மூன்றும் பிராகாரத்தின் வடமேற்குத் திசையில் கமலாம்பாள் திருக்கோயில் அமைந்துள்ளது. இதனைப் பராசக்தி பீடம் என்கின்றனர். இடக்கால் மீது வலக்காலை இட்டவண்ணம் அன்னை உட்கார்ந்த நிலையில் உள்ளாள். அன்னைக்கு நான்குக் திருக்கரங்கள் உள்ளன. இக்கோயிலின் நுழைவு வாயிலின் இடபுறம் காணப்படும் கல்வெட்டு மாறவர்மன் வீரபாண்டியனின் 21ஆவது ஆட்சி ஆண்டில் வெட்டப்பட்டது. இதன்காலம் கி. பி. 1355 ஆகும். சுந்தரபாண்டியன் திருவீதியில் வடக்கில் சிறகில் இச்சோழ விநாயகப் பிள்ளையார் திருக்கோயில் திருப்பணிக்கு அளித்த நிவந்தங்கள் கூறப்பட்டுள்ளன. இக்கல்வெட்டின் முன்னால் சோழர் காலத்து உச்சிஷ்ட கணபதியின் உருவச் சிலையும் வைக்கப்பட்டு உள்ளது. (இது போன்ற சோழர்கால உச்சிஷ்ட கணபதியாரின் உருவத்தை மேற்குக் கோபுரத்தில் காணலாம்.) இன்று காணப்படும் கமலாம்பாள் கோயிலின் கற்பக்கிருகத்தில் கி பி. 1355இல், வீரபாண்டியன் காலத்தில் உச்சிஷ்ட கணபதியின் சிலை இருந்திருக்குமோ? பிற்காலத்தில் கமலாம்பாளின் (பராசக்தி) கற்சிலை கற்பகிருகத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டு உச்சிஷ்ட கணபதியார் வெளியே வந்துவிட்டாரோ? தெரியாது. கமலாம்பாள் பராசக்தி பீடமாகக் கருதப்படுகிறது. அன்னையின் கர்ப்பக்கிருகத்தின் இடப்புறத்தில் சண்டிகேஸ்வரியின் சந்நிதியும் உள்ளது. சண்டிகேஸ்வரியின் வரலாறு என்ன? திருமுறைகள், கல்வெட்டுகள் ஆகியவைகளில் சண்டிகேஸ்வரியைப் பற்றி எந்தவிதமான குறிப்புகளுமில்லை. சில சிவாலயங்களில் அம்மன் கோயிலில் சண்டிகேஸ்வரியின் சந்நிதியைப் பார்த்து இருக்கிறேன். இது சக்தி வழிபாட்டின் தாக்கமோ? அப்படியானால் சண்டிகேஸ்வரியை பிரதிஷ்டை செய்யும் வழக்கம் எப்போது ஏற்பட்டது? சண்டிகேஸ்வரியை பிரதிஷ்டை செய்து அம்மன் கோயிலைப் பராசக்தி பீடம் என்று கொள்ளுவானேன்? இன்றைய நிலையில் ஒன்றுமே புரியவில்லை, புரிந்தவர்கள் புரியவைப்பார்களாக.

இன்று திருவாரூர்க் கோயிலில் உள்ள இரண்டு அம்மன்கோயில்களும் தேவாரப் பதிகங்கள், கல்வெட்டுக்கள் இவைகளுடன் ஒத்துவரவில்லை. ஆய்வின் அடிப்படையில் உண்மை வரலாறு என்ன என்பதும் தெரியவில்லை. அறிந்தவர்கள் விளக்கம் அளிப்பார்களாக. தெய்வம் ஒன்றுதான். அவன், அவள், அது, மரம், செடி, கொடி, பறவை, மிருகம், மலை, நீர், நெருப்பு, ஆகாயம், காற்று இவைகள் எல்லாவற்றிலும் தெய்வாம்சம் சொல்லப்படுவது இந்துமதம் ஒன்றில்தான். நம் முன்னோர்கள் ஆலயங்கள், கோவில்கள் இவைகளைக் கட்டி வழிபாட்டுமுறைகளை ஏற்படுத்தும்போது அடிப்படைக் காரணங்களையும் எடுத்து விளக்கினர். விளக்கம் தெரியாதபோது வினாக்கள் எழுகின்றன; அவ்வளவுதான்.

கழறிற்றறிவார்

வித்துவான் திரு. கா. ம. கண்ணப்பன் எம்.ஏ., பி.எட்.,

[தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் 4—12—1988 ஆங்கிலமாத முதல் ஞாயிறன்று வழங்கிய அருளுபதேசத்தையொட்டி எழுதப்பெற்ற கட்டுரை.]

ஸ்ரீகாசியில் மூன்றும் அனைத்துலக சைவசித்தாந்தக் கருத்தரங்கம் நிகழ இருந்த நேரம்! தமிழ், சமஸ்கிருதப், இந்தி, ஆங்கில மொழிகளில் - ஆம்! நான்கு மொழிகளில் கருத்தரங்க நிகழ்ச்சிகள் அருளாணைப்படி நிகழ்கின்ற அமைப்பு! பணிகள் சுறுசுறுப்பாகத் தருமையில் நடந்துகொண்டிருந்தன. காசிக்குச் செல்லும் அன்பர்கள், அறிஞர்கள், அலுவலர்கள் ஆகியோர்க்குத் தக்க அறிவுரைகள் வழங்கியும், அனுப்பு அருளியும் குருமணிகளுக்குப் பணிகள் மிக்கிருந்தநேரம்! அன்று முதல் ஞாயிறும் கூடிற்று.

ஸ்ரீலஸ்ரீ குருமணிகள் ஸ்ரீசொக்கநாதர் பூசையை நிறைவித்துப் பண்டாரக்கட்டிற்கு எழுந்தருளிப் பாராயணமும் ஆயிற்று. அன்பர்கள், சித்திராசனத்தில் எழுந்தருளியிருந்த குருமணிகளின் திருவடி தொழுது திருநீறு பெற்று அணிந்து மகிழ்ந்து அமர்ந்தனர். திருமுறைப்பாராயணத்தை அடுத்து அருளுபதேசம் தொடங்கிற்று. ஸ்ரீலஸ்ரீ குருமணிகள் குருதோத்திரம் செய்து கொண்டார்கள்.

முதலில் டிசம்பர் மாதச் சிறப்புத் திருநாள்கள் பற்றி அருளினர்கள். சேரமான் பெருமாள் நாயனர் வரலாற்றில் மருமக்கள் தாய முறையில் சேரமான் அரசேற்றமை, சேரமானின் திருநீற்று அன்பு, யாதும்,யாவும் கழறினவும் இறையருளால் அறியும் திறம்பெற்றமை சிவபூசை முடிவில் சிலம்பொலி கேட்டமை வரை முந்தைய அருளுபதேசத்தில் உணர்த்தியனவற்றை நினைவு கூர்ந்தார்கள்.

சேரமானுர் அரசாட்சி புரிந்துவரும் காலத்தில் திருஆலவாய் உடையார் பாணபத்திரருக்குப் பெருஞ்செல்வம் அளிக்கத் திருவுளம் கொண்டார். பாணபத்திரர் கனவில் பெருமான் எழுந்தருளினர்; ' திருமுகம் தருவோம்; சேரமானிடம் கொடுத்துப் பொருள் பெற்றுத்தாமதம் இன்றி வருக' என உணர்த்தினர். பாணபத்திரர் மதுரைச் சோமசுந்தரக் கடவுளை இசைப்பாட்டுக்களால் துதிப்பவர்.

யாழ்ப்பாணர், பாணபத்திரர் இறையடி தொழுது ஓலைப்பெற்றுச் சிரத்தின் மேல் தாங்கிக் கொண்டு சேரநாடு போந்தார்; கொடுங்கோளூர் அடைந்தார். சேரமானுக்குத் தெரிவிக்கச் செய்தார். சேரமான் பக்தியுடன் பாணபத்திரரைத் தொழுதார்; வரவேற்றார். திருமுகத்தை ஏந்தித் தம் திருமுடிமேல் வைத்துக் கொண்டார். ஆனந்த வெள்ளத்து ஆழ்ந்தார். வாசித்தார்; தேவ தேவர் திருவருளைத் துதித்தார்.

'மதிமலிபுரிசை' எனத் தொடங்கும் அத்திருமுகப்பாசுரத்தின் பெருமைகளைக் குருமணிகள் விளக்கம் செய்தருளினர்கள்.

'' மதிமலி புரிசை மாடக் கூடல்
பதிமிசை நிலவும் பால்நிற வரிச்சிறகு
அன்னம் பயில்பொழில் ஆல வாயில்
மன்னிய சிவன்யான் மொழிதரு மாற்றம் ''

- இது தொடக்கம். 'யார் திருமுகம் தருகின்றார்' என்பதைக் குறிப்பது இப்பகுதி. சிவன் நிலைபேறு உடையவன் என்பதை 'மன்னிய சிவன்' என்ற சொல் குறிக்கின்றது.

'' பருவக் கொண்மூப் படியெனப் பாவலர்க்கு
உரிமையின் உரிமையின் உதவி ஒளிதிகழ்
குருமா மதிபுரை குலவிய குடைகீழ்ச்
செருமா உகைக்கும் சேரலன் காண்க.''

- இது அடுத்த பகுதி. '' யாருக்குத் திருமுகம் அளிக்கப்படுகின்றது, என்பதைக் குறிப்பது இப்பகுதி. '' பாவலர்க்கு '' என்ற தொடர் அறங்கூறுவோர் ஆகிய பாடல் இயற்றுவோர் என்னும் பொருள் தருவது. பாடல் அறத்தைப் பொருளாகக் கொள்ளவேண்டும். பாவலர்க்குச் சேரமான், பருவத்தில்பெய்யும் மழைபோலக் கொடுப்பான் என்னும் கருத்து இதில் காணப் படுகின்றது.

'' பண்பால் யாழ்பயில் பாணபத்திரன்
தன்போல் என்பால் அன்பன்; தன்பால்
காண்பது கருதிப் போந்தனன்;
மாண்பொருள் கொடுத்து வரவிடுப் பதுவே ''

- இப்பகுதி நிறைவாக அமைந்தது. '' என்ன செய்தி '' என்பதைச் சுட்டுவது. ''இன்னார்க்குப் பொருள்தருக'' எனவும் 'உடன் அவரை அனுப்புக' எனவும் கூறுகின்றது. பொருள் கொடுத்தற்கு உரியவர் பாணபத்திரர். அவர் ''பண்பால் யாழ்பயில்பவர்'' அதாவதுபண்பாடு

உடையவர்; இறைத்தொண்டு செய்பவர்; மேலும் நின்போன்ற அன்பர் - எனப்பொருள் விளக்கம் காண வேண்டும். மாண்பொருள் - மாட்சிமிக்க பொருள். சிறந்த பொருள் தருக. சிவன் உயிர்கட்கு நன்மைதருபவன் ஆதலால் 'மாண் பொருள் தருக' எனக் குறித்தார். இங்ஙனம் பல கருத்துக்களைத் திருமுகப்பாசுரம் கொண்டு அருளிச் செய்து பொருள் நுட்பம் தெளிவித்தார்கள். இறைவன் பெற்றான் சாம்பனுக்காக உமாபதிசிவத்திற்கு அனுப்பியருளிய "அடியார்க்கு எளியவன்" எனத் தொடங்கும் திருமுகப் பாடலை ஒப்பிட்டு அருளினார்கள். ஆலவாய் அண்ணல் திருமுகப்பாசுரம் 'மன்னியசிவன் யான்' என்று பெருமிதம் தோன்ற நிற்கின்றது. கூத்தப்பெருமானின் திருமுகப்பாசுரம் 'அடியார்க்கு எளியன்' என அன்பர்க்கு அருள் செய்யும் எளிமை தோற்றி இன்பம் பயக்கிறது என இவற்றிடையே வேறுபாடு காட்டி நுட்பம் சுட்டியமை மனத்தை நிறைவித்தது. பதினோராம் திருமுறையில் "மதிமலிபுரிசை" எனத் தொடங்கும் திருமுகப்பாசுரம் முதற்பாடலாக அமைத்திருத்தலைச் சுட்டினார்கள்.

திருமுகம் பெற்ற சேரமானார் தம்உரிமைச் சுற்றத்தார் எல்லாரையும் அழைத்துப் பாணபத்திரரைப் பணிவித்தார். அரச மாளிகையில் அமைந்த பண்டாரத்தில் உள்ள பொருள்கள் அனைத்தையும் அளித்து அரசாட்சியையும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டினார். பாணபத்திரர் "அடியேனுக்குத் தேவையான அளவே பெறுமாறு இறைவன் ஆணை; அரசாட்சியையும் பிறசெல்வங்களையும் தாங்களே கைக்கொண்டருள்க" எனக்கூறி வணங்கிநின்றார். இறை ஆணையை மறுத்தற்கு அஞ்சிப் பாணபத்திரருக்குத் தேவையானவற்றை அளித்தார்; உபசரித்தார்; வழியனுப்பினார்.

சேரமான் இங்ஙனம் நல்அரசாட்சி செய்து ஒழுகினார். இவருக்குத் தில்லைநடராசப்பெருமான் நாள்தோறும் பூசை முடிவில் சிலம்பொலி கேட்பித்து வந்தார். ஒருநாள் சிலம்பொலி கேட்டிலது. சிவயோக வழிபாடாற்றிய இவர் மனங்கலங்கினார்; "இவ்வுடலால் அடையத்தக்க பயனை அடையாது ஒழிந்தேன்; அடியேன் யாது பிழைசெய்தேனோ?" எனக் கவன்றார். தம் உடைவாளை உருவினார்; தம் திருமார்பில் நாட்டிட முயன்றார். அதுபோது சிவபெருமான் இவருக்குத் தம் திருச்சிலம்பொலி காட்டி அதிகமாகக் கேட்குமாறு அருளினார். உடனே பெருமானை நிலமுற வணங்கினார் சேரமானார். "தேவரீர்; திருவருள் செய்யக் காலந்தாழ்த்தமைக்குக் காரணம் யாதோ" எனவினவினார். "திருவம்பலத்தில் வன்றொண்டர் துதித்துப் பாடிய பதிகத்தினை நின்று கேட்டோம்; காலம் தாழ்த்தது" என இறைவன் அசரீரி அருளினார். குருமணிகள், சுந்தரரைச் சேரமானுக்கு நினைப்பித்த - சுந்தரரின் இத்தரிசனம் இரண்டாவது தரிசனம்.

கொங்குநாடு சென்று மீண்டு, திருமுதுகுன்றம் தரிசித்து, தில்லை போந்து வழிபட்ட இரண்டாவது தரிசனத்தின்போது இந்நிகழ்ச்சி நடந்தது என ஆய்வுக்குறிப்பு நல்கியருளினார்கள். இறைவன் அடியார்க்கு அருளும் திறம் எண்ணிச் சேரமானார் அதிசயித்தார். "சிவபெருமானைப் பொன்னம்பலத்தில் கண்டுவணங்கி, வன்றொண்டரையும் தொழுது மீள்வோம்" என உளம் கொண்டார். "ஒரு நன்னாளில் பயணம் ஆக ஆவன செய்க" என அமைச்சர்களுக்குக் கட்டளை இட்டார்.

சேரமானார், ஒருநன்னாளில் நல்வேளையில் வீரர், மக்கள், அரசச் சுற்றம் சூழப் புறப்பட்டு அஞ்சைக்களத்து அப்பரை வணங்கி விடை கொண்டார். பட்டத்து யானை மீது ஏறிக் கொடுங்கோளூர் கடந்து சென்றார். மலைநாடு கடந்தார். வேண்டும் பரிசனங்கள் தம்முடன் வரக்கொண்டார்; அமைச்சர் முதலியவர்களுக்கு விடை கொடுத்து அனுப்பினார். கொங்கு நாடு கடந்தார்; சோழநாடு சார்ந்தார். காவிரித் தென்கரை நண்ணினார். கோவை, திருநணா, கரூர், திருச்சிராப்பள்ளி, திருத்தவத்துறை, பழுவூர் வழியாகவந்தமையை-வழித்தடம் சுட்டிவிளக்கினார்கள். தில்லைப்பதிமேவினார். தில்லைவாழ் அந்தணர்களும் திருத்தொண்டர்களும் எதிர்கொண்டனர்.

திருக்கோயிலுள் ஆனந்தக் கண்ணீர் பெருகச் சென்றார். திருமாளிகையினை வலம் வந்தார்; திருப்பேரம்பலம் வணங்கினார். திருச்சிற்றம்பலம் சார்ந்தார். பெருங்கூத்தர், ஆடுதற்கு எடுத்த தம் திருவடியைச் சேரனார்க்குக் காட்டினார்; நெக்குருகிப் போற்றி வழிபட்டார். திருக்களிற்றுப்படியின் கீழேநின்று "பொன்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம் மேனிபொலிந்து இலங்கும்" என்று தொடங்கிப் 'பொன்வண்ணத் திருவந்தாதி' என்ற பிரபந்தம் பாடிப் பணிந்தார். பாடல் கேட்டருளிய பெருமான் தம் காற்சிலம் பொலியினை அவர்க்கு நேரே கேட்பித்தருளினார்; பூசாகாலங்கள் தோறும் வழிபட்டார். வீதிகளை வணங்கிப் புறத்தே போய்த் தங்கியிருந்தர். பலநாளும் வழிபட்டிருந்தார்.

இங்ஙனம் இருக்கும் நாளில் சுந்தரரைக் காணவேண்டும் என்றும் விரும்பினார். அம்பலவாணரிடம் அருள்விடை கொண்டார், திருவாரூர் செல்லும்வழியில் திருஞானசம்பந்தப் பெருமான் அவதரித்தருளிய சீகாழிப் பதியடைந்தார்;வணங்கினார். சிவபிரான் எழுந்தருளிய வேளூர், மயிலாடுதுறை, பேரளம் முதலிய தலங்களை வழிபட்டு ஆரூர் அடைந்தார்.

திருநாகைக் காரோணம் வழிபட்டுமீண்ட சுந்தரர், சேரமானார் வருகை அறிந்து எதிர்கொண்டார். மிகவும் மகிழ்ந்து வணங்கினார்.

சேரமானும் எதிர் வணங்கி, அன்பு பெருகத் தழுவினர். அருகில் இருந்த தொண்டர்கள் மகிழ்ந்தனர். சுந்தரர் 'சேரமான்தோழர்' என வழங்கப் பெற்றார். முன்பு தம்பிரான் தோழராகும் இறையருள் பெற்றவர் சுந்தரர். "தோழமையாக உனக்கு நம்மைத் தந்தனம்" என்று ஆரூர்ப்பெருமான் தம்மைத் தோழமை கொண்டருளத் தந்தார். இதுபோது "மானச்சேரர் பெருமானார் தாமும், வன்றொண்டரும், கலந்த பான்மை நண்பால் 'சேரமான்தோழர்' என்று 'பார்பரவும் மேன்மை நாமம்' சுந்தரர்க்கு விளங்கிற்று – எனத் தம்பிரான் தோழர், சேரமான் தோழர் என்ற திருப்பெயர் களுக்கு இயைபு விளக்கம் அருளியபாங்கு இனிய சிந்தனையாய் அமைந்தது. சுந்தரரும், சேரமானும் நேரே திருக்கோயில் சென்று வழிபட்டனர். சேரமானர், சுந்தரர் முன்னிலையில் தியாகேசரை வணங்கினர். திருவாரூர் மும்மணிக்கோவை பாடியருளினர்.

சுந்தரர் சேரமானுடன் திருக்கோயிலிலிருந்து தம் திரு மாளிகைக்குச் சேரமானரை அழைத்துக் கொண்டு புறப்பட்டார். பெண்கள் நிறைகுடம் ஏந்திவர, திருமாளிகையில் பரவையார் எதிர்கொண்டார். சேரமானரைப் பசும்பொன் கால்களினலாகிய ஆசனத்து இருத்தினர். நம்பிகளையும் உடனிருக்கச் செய்து இருவருக்கும் பரவையார் விதிப்படி பூசை செய்தார்; வழிபட்டார்.

சேரமானர்க்கும் உடன் வந்தார்க்கும் திருவமுது செய்யும் பொருட்டு வைதிக உணவாகவும் அரசர்க்கு உரிய உணவாகவும் சமைக்கப்பெற்றன. சேரமானரைத் தம்முடன் திருவமுது செய் தருளுமாறு சுந்தரர் வேண்டிக் கொண்டார். தம்பரிசனங்களுடன் திருவமுது கொள்ள இருந்த சேரனர், சுந்தரரின் வேண்டுகோளின் படி சுந்தரருடன் திருவமுது செய்தார். மிக்க அன்பு பெருக ஆரூரானைத் தொழுது பலநாள் திருவாரூரில் சேரமான் தங்கி யிருந்தார்.

சேரமானர் சுந்தரரை வணங்கியும் தியாகேசர் திருவடி தொழுதும் ஆரூரில் தங்கியிருந்தமைவரை அன்றைய அருளுபதேச மாக மலர்ந்தது. தலச்சிறப்புக்கள், இலக்கிய மேற்கோள்கள், தத்துவ விளக்கங்கள் பொருந்த அருளுபதேசம் பயனுள்ளதாக அமைந்து நிறைந்தது.

இன்சுவைக் கனிச்சாறு அன்பர்கட்கு வழங்கப்பெற்றது. அருந்தி மகிழ்ந்தோம். இனிய சிந்தனைகளை ஏந்தி இல்லம் ஏகினேம்.

சேரமான் பெருமாளார் செய்யபுகழ் நெறிவளர்க்கும்
வாரமார் குருமணியை வணங்கியருள் நெறிப்படுவோம்!

வாழ்க குருமணிகள்!

மேலை நாட்டுத் தத்துவ மேதைகள்
(Western Philosophers)

சுவாமி வீரபாகு

(மலர் 47, இதழ் 11, பக்கம் 642 இன் தொடர்ச்சி.)

3. அரிஸ்டாட்டில் (Aristotle) - தொடர்ச்சி (6)
(கி. மு. 384-322)

கூடி வாழும் குணம் :

மனிதன் கூடி வாழும் இயல்புடைய (Gregarious) உயிரினம் ஆவான். இயற்கையாகத் தன்னையொத்த மற்றவர்களோடு மனங்கலந்து உறவாடி வாழ்கிறான்; அதனை விரும்பவும் செய்கிறான். ஒரு மனிதனைப் பல்லாண்டுக்காலம் மற்றவர்களை விட்டுப் பிரித்து வைத்து வாழவைப்பதினும் பெருந்தண்டனை ஒன்று இருக்க முடியாது. எப்படியும் ஆதிமனிதன் அநேகமாகக் கூடிவாழும் குணம் கொண்டிருந்தான் என்பதை வரலாற்றில் வரக் காண்கிறோம்.

புராதன மனிதன் மலைப்பாங்கான இடங்களில் பொந்துகளிலும் குகைகளிலும் வாழ்ந்திருக்கக் கூடும். அல்லது மரங்களின் மீது மனைகள் அமைத்து அவற்றில் தற்காப்புக்காக வாழ்ந்திருக்கலாம். அடர்ந்த மரங்களின் அடியின் கீழும் அண்டிவாழ்ந்திருக்கச் சாத்தியம் உண்டு. அன்றி, குன்றுகளின் கீழ்த்தாழ்ந்த அடக்கமான இடங்களிலும் கூடிவாழ்ந்திருக்க வேண்டும். எப்படியோ, மனிதன் கூடி வாழ்ந்தால் கோடி நன்மை என்ற கோட்பாட்டினைக் கொண்டு இணைந்திருக்கவேண்டும். ஹாப்ஸ் (Hobbes), லாக்ஸ் (Lockes), ரூஸோ Roussau) போன்ற அரசியல் அறிஞர்கள் தங்களது சமுதாய ஒப்பந்தக் கோட்பாட்டினை விரிவாகச் சாற்றியுள்ளனர்; அவர்கள் பாதுகாப்பு, உறவு, கூட்டு முயற்சி, முன்னேற்றம், வளமுடைமை. வாழ்க்கைநலம் போன்றவற்றைக் கருதி வையக வாழ்க்கையில் ஒப்பந்தம் செய்து கொணடு ஒன்றுபட்டு வாழத் தொடங்கினர் என்ற வழக்காற்றை வகுத்துக் கூறுகின்றனர்.

அரசியல் முறையில் அநேக வகைகள் :

மேலே குறிப்பிட்ட முறையில்தான் அரசியல் அமைப்பு (Political Organisation) ஆனது, என்று கூறுவது மிகையாகாது.

தங்கள் வாழ்க்கை நலத்தை உத்தேசித்து மக்கள் தங்களுக்கேற்ற அரசியல் அமைப்பினை ஆக்கிக் கொண்டனர் என அரிஸ்டாட்டில் அளவிட்டுப் பகர்கிருன். அப்படி அமைந்த அரசியல் முறைகள் அநேகம் அநேகம் ஏற்பட்டன. இந்தக் கட்டுரைத் தொடரின் முதல் கட்டுரையில் கூட அநேக வித அரசியல் அமைப்புக்கள் பற்றிப்பார்த்தோம். சாக்ரெட்டீஸ் எவ்விதக் குறிப்பிட்ட அரசியல் முறையையும் அவர் கருத்தாக அலசி ஆய வில்லை. எனினும், அவரே அரசியல் சிந்தனைக்கு அடிகோலிய பெருமைக்கு உரிய பெருந்தகைஆவார். ஃசெனோபன்(Xenophon) என்னும் பெயரைக் கொண்ட சாக்ரெட்டீஸின் மாணுக்கர், நண்பர், கூடி அவரோடு வாழ்ந்தவர். தம் ''நினைவுகள்'' (Memorabilia) என்ற நூலில் சாக்ரெட்டீஸின் சால்புகள் பற்றிச் செப்பிப் பாராட்டுகிருர். "சாக்ரெட்டீஸ் சம்பாஷிக்கும் போதெல்லாம், ஓர் அரசு என்ருல் என்ன? அரசியல் அறிஞன் (Statesman) என்பவன் எப்படிப்பட்ட மதியுடையவனுக இலங்க வேண்டும்? ஆட்சியில் அரசியல் ஒழுங்கு முறை எப்படி இருக்க வேண்டும்? என்பதைப் பற்றி எல்லாம் ஆய்வுக்குத் தூண்டுகோலாக ஆணித்தரமான சிந்தனைகளைத் தூண்டி விட்டுச் சிறப்பான கருத்துக்களைச் செப்பியிருக்கிருர்.

கிரேக்க நாட்டில் பலவகை அரசியல் அமைப்புக்கள் கிளர்ந்தெழுந்து சிறந்திருந்தன. ஒவ்வொரு நாடும் நகர்-தேசம் (City States) என அழைக்கப்பட்டன - அவை ஒவ்வொன்றும் தனித்தனி நாடாகவே தழைத்தோங்கின. ஸ்பார்ட்டா (Sparta), ஏதென்ஸ் (Athens), மிலிட்டஸ் (Miletus), அயோனியா (Ionia) போன்ற நகர் - தேசங்கள் பன்னிரண்டும் பகட்டாக வாழ்ந்தன என வரலாற்று ஆசிரியர்கள் வகுத்துக் கூறுகின்றனர். நகர் - தேசங்களில் நிலவிய ஆட்சி முறைகளில் முக்கியமானவை; சர்வாதிகாரம் (Dictatorship or Totalitarianism) ஜனநாயகம் (Democracy), மன்னர் ஆட்சி (Monarehy), பிரபுக்கள் ஆட்சி (Aristocracy), குழுவாட்சி (Oligarchy), கொடுங்கோலாட்சி (Tyranny) ஆகிய ஆட்சி முறைகள் (Mode of Goverument of states), கிரேக்க நாட்டிலே கீர்த்தியோடு திகழ்ந்தன என்பது குறிப்பிடத்தக்கது. ஏதென்ஸில் ஏற்பட்ட ஜனநாயகம் தான் (Democrecy) சர்வமக்களாலும் பாராட்டப்பட்டது - விரும்பப்பட்டது - செல்வாக்காகச் சிறந்து நின்றது எனலாம்.

அரசியல் சட்டமும் ஆட்சி முறையும் :

முன்னர் நாம் அரிஸ்டாட்டிலின் இறை தத்துவ கோட்பாட்டினை (Metaphysical Theory) ஆய்ந்தோம். இடையில் தர்க்க சாத்திரத்தைப் பற்றிச் சில கட்டுரைகளில் செப்பப்பட்டது.

தர்க்க சாத்திரம் "அறிவியலுக்கெல்லாம் அறிவியல்" (The Science of Sciences) என்று அறிஞர் பெருமக்களால் ஆய்ந்துரைக்கப்பட்டது. ஆகையால் இடையில் தர்க்க சாத்திரம் (Logic) பற்றிச் சுருக்கமாக விளக்க வேண்டியதாயிற்று. இஃது ஏனைய எல்லா அறிவியல் துறைகளுக்கும் அடிப்படை ஆகையால் அதனைக் கிளைப்படுத்தி அதன் சீர்த்தியைக் கண்டோம்.

அரிஸ்டாட்டில் இறைதத்துவ கோட்பாட்டிலிருந்து (Metaphysics) இறங்கிவந்து மண்ணுலக அரசியல் கோட்பாடுகள் (Theories of States) பற்றி மதிப்பீடு செய்யத் தலைப்படுகிறார். இவர் 158 அரசியல் சட்டங்களை எடுத்துக் கொண்டு ஆய்கிறார் (158 Constitutions includlng Athens) தன் அரிய அரசியல் நூலில். இவர் அரசியல் தத்துவத்தை ஆணித்தரமாகவும், தெளிவாகவும், அர்த்த புஷ்டி மிக்கதாகவும், விளக்கமாகவும், தர்க்க முறைக்குத் தக்கதாகவும், உதாரண பூர்வமாகவும் (Concrete) உரைத்துச் சிறப்பிக்கின்றார். உலகில் அன்று நிலவிய அத்தனை அரசியல் சட்டங்களையும் ஆய்ந்து, விளக்கி, அவற்றின் நன்மை - தீமைகளை நவின்று நல்லமுறையில்பேசுகிறார் அறிஞர் அரிஸ்டாட்டில். மேலே குறிப்பிடப்பட்ட அத்தனை அரசியல் முறைகளையும் ஒன் றன்பின் ஒன்றாக எடுத்துக்கொண்டு ஒப்பீடு செய்து மதிப்பீடு புரிகின்றார். ஒவ்வொன்றின் சக்தி வாய்ந்த அம்சங்களையும், பலன் கூட்டாத பலவீனங்களையும்பகர்ந்து போகிறார். சர்வாதிகார ஆட்சிமுறையை (Dictatorship) முழுசக்தியோடு சாடுகிறார் அரிஸ்டாட்டில். மக்கள் அனைவருடைய உரிமைகளையும் மனிதன்ஒருவனிடம், சர்வாதிகாரச் சழக்கனின் ஆசைக்கு அடைக்கலம் செய்வது ஆபத்தானது மட்டு மல்ல; அபத்தமானதும் கூட என்று அழுத்தம் கொடுத்துக் கூறுகிறார் அரிஸ்டாட்டில் ("Of all the forms of government, dictatorship is the worst one. For it subordinates theiterests of all to the ambition of one") ஆட்சிமுறைகள் அத்தனையினும் விரும்பத்தக்கது எது தெரியுமா? "எந்த ஓர் அரசியல் அமைப்பு மக்கள் அனைவரையும் - அவர் எவராக இருந்தாலும் - தத்தம் திறங்களை வெளிப்படுத்த வாய்ப்பு வழங்குவதாகவும், தங்கள் வாழ்நாளை மகிழ்ச்சிகரமாகக் கழிக்கச் செய்வதாகவும் இருக் கிறதோ அதுவே மிகமிக விரும்பத்தக்கது". (The most desirable form of goverument is that which enables every man, to exercise his abilities and to live his days most pleasantly.)

ஆதார நூல்கள் :

A History of Western Philosophers by Bertrand Russell.
100 Great Thinkers by E. Greene

(தொடரும்)

செய்திகள்

ஆயில்யத் திருநாள் ஆலய வழிபாடு

தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் ஜன்ம நட்சத்திரமாகிய ஆயில்யத் திருநாள் ஆலய வழிபாடு விபவ - ஐப்பசி 17 (2—11—88) புதன்கிழமையன்று நெய்தல் வாயில் திருக்கோயிலில் விசேஷ அபிஷேக ஆராதனைகளுடன் நடைபெற்றது. இத்தலம் ஸ்ரீ திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிய அடைவுத் திருத்தாண்டகத்தில் இடம் பெற்ற வைப்புத் தலமாகும். தலச் சிறப்புக்களை விளக்கித் தருமை ஆதீனப் புலவர், வித்துவான் திரு. வி. சா. குருசாமிதேசிகர் உரையாற்றினர். பக்தர்கள் விழாவில் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

குருவருளும் அருளுபதேசமும்

தருமை ஆதீனத் திருமடத்தில் ஆங்கிலமாத முதல் ஞாயிறு தோறும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தை அன்பர்கள் வழிபட்டு அருளுபதேசம் பெறும் பிரார்த்தனைக்கூட்டம் நிகழ்ந்து வருகின்றது. இம்மாதம் 90 ஆம் அருளுபதேசம் 4—12—88 அன்று திருமுறைப் பாராயணத்துடன் தொடங்கிச் சிறப்பாக நடைபெற்றது.

திருமுறை, சாத்திரம், புராணம், இலக்கியம் முதலியவற்றிலிருந்து மேற்கோள்காட்டித் தத்துவச்செறிவோடு ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் பெரியபுராண விரிவுரை அருள்கின்றார்கள். இம்மாதம் கழறிற்றறிவார் புராணப் பகுதி உபதேசிக்கப்பட்டது. பாணபத்திரர்க்கு மாண்பொருள் கொடுத்து வரவிடுக்குமாறு இறைவன் சேரமானார்க்கு அருளிய திருமுகப்பாசுரச்சிறப்பு, கழறிற்றறிவார் யோகப் பயிற்சியால் சிலம்பொலி கேட்டமை சேரமான் சுந்தரர் சந்திப்பு முதலிய பகுதிகளை உளங்கொள விளக்கினார்கள்.

தருமை ஆதீன அடியவர்கள், அலுவலர்கள், அன்பர்கள், ஆசிரியர்கள் முதலியோர் அருளுபதேசம் கேட்டுப் பயன்பெற்றனர்.

அடுத்து 91 ஆம் அருளுபதேசம் 1—1—1989 அன்று நடைபெறும். அன்பர்கள் கலந்துகொண்டு பயன்பெறுவாராக.

கந்தசஷ்டி விழா

தருமை ஆதீனத்தில் :

அருள்மிகு முருகப்பெருமானுக்குரிய திருநாள்களுள் மிகச் சிறந்ததாகக் கொண்டாடப்பெறும் கந்தசஷ்டிவிழா 10—11—88

வியாழக்கிழமை முதல் 16—11—88 புதன்கிழமை வரை சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது. ஆதீனத்தில் ஆன்மார்த்த மூர்த்தி ஸ்ரீ சொக்கலிங்கப்பெருமான் வழிபாட்டுடன் ஸ்ரீ முருகப் பெருமானுக்கும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் சிறப்பு வழிபாடு நிகழ்த்தினார்கள். மாலை 7 மணி அளவில் தருமை ஆதீனப் புலவர் வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர், எம். ஏ., ஸ்ரீ சொக்கநாதப்பெருமான் பூசைமடத்தில் கந்தபுராணவிரிவுரை நிகழ்த்தினார். அன்பர்கள் கேட்டுப் பயன்பெற்றனர்.

ஆதீனம் தேவஸ்தானங்களில் :

தருமை ஆதீனத்திற்குச் சொந்தமான சீகாழி, திருப்பனந்தாள், திருவையாறு, திருபுவனம், திருக்கடவூர், வைத்தீசுவரன்கோயில், மயிலாடுதுறை குமரக்கட்டளை ஆகிய தலங்களில் ஸ்ரீ முருகப் பெருமானுக்குச் சிறப்பு வழிபாடும் கந்தபுராண விரிவுரையும் நிகழ்த்துவிக்கப்பெற்றன.

சீகாழி ஸ்ரீ சட்டைநாதசுவாமி திருக்கோயில், ஸ்ரீ திருஞான சம்பந்த சுவாமி திருக்கோயில் சந்நிதியில் வித்துவான் திருமதி. ப. நீலா, எம். ஏ., எம். ஃபில்., திருப்பனந்தாள் ஸ்ரீ அருணஜடேசுவரசுவாமி தேவஸ்தானத்தில் வித்துவான் திரு. தா. ம. வெள்ளைவாரணம், திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேசுவரசுவாமி தேவஸ்தானத்தில் திரு. சாமி. கிருஷ்ணமூர்த்தி, எம். ஏ., திருபுவனம் கம்பகரேசுவரசுவாமி தேவஸ்தானத்தில் திரு. இரா. மருதநாயகம், எம். ஏ., எம். ஃபில்., வைத்தீசுவரன்கோயில் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானத்தில் வித்துவான் திரு. செ. முத்தையன், எம். ஏ., மயிலாடுதுறைகுமரக்கட்டளை ஸ்ரீசுப்பிரமணியசுவாமிதேவஸ்தானத்தில் புலவர் திரு. கே. கணபதி, பி. லிட்., பி. எட்., ஆகியோர் கந்த புராண விரிவுரை ஆற்றினர். அன்பர்கள் சஷ்டி விழாவிற் கலந்து கொண்டு பயனுற்றனர்.

வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமிதேவஸ்தானத்தில் ஸ்ரீ செல்வமுத்துக்குமாரசுவாமிக்கும் மயிலாடுதுறை-குமரக்கட்டளை ஸ்ரீ சுப்பிரமணியசுவாமிக்கும் விசேஷ அலங்கார ஆராதனைகளும் திருவீதியுலாக் காட்சியும் சிறப்பாக நடைபெற்றன. பக்தர்கள் தரிசித்து இன்புற்றனர்.

கடைமுழுக்கு விழா

திருக்கயிலாயபரம்பரைத் தருமைஆதீனத்துக்குச் சொந்தமான மயிலாடுதுறை வள்ளலார்கோயில் ஸ்ரீ வதான்யேசுவரசுவாமி திருக்கோயிலில் கடைமுழுக்கை நிறைவாகக் கொண்டு பத்து நாட்கள் துலா உற்சவம் சிறப்பாக நடைபெற்றது. (15—11—88) செவ்வாய்க்கிழமை கடைமுழுக்கன்று தீர்த்தம் கொடுத்தருளும்

12—11—88 சனிக்கிழமையன்று திருக்கல்யாணத் திருவிழாவும் சிறப்பாக நடைபெற்றன. அன்பர்கள் வழிபட்டும் தீர்த்தமாடியும் திருவருள்பெற்றனர்.

தருமபுரத்திற்குச் சக்திரதம் எழுந்தருளியமை

பாரத பூமியை வலம் வந்து கொண்டிருக்கும் அருள்மிகு சமயபுரம் மாரியம்மன் திருவுருவம் எழுந்தருளச் செய்யப் பெற்ற சக்திரதம் 4—12—88 ஞாயிறன்று இரவு 7-00 மணியளவில் தருமபுரத்திற்கு எழுந்தருளிற்று. தருமை ஆதீனம் அஷ்டாதசபுஜ மகாலட்சுமி துர்க்கையம்மன் ஆலயத்தின் முன்பு ஸ்ரீ மாரியம்மனுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் நிகழ்த்தப்பெற்றன. தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் எழுந்தருளிவழிபாடாற்றி ஆசியுரை வழங்கினார்கள். பக்தர்கள் வழிபாடு ஆற்றினர். மயிலாடுதுறை விசுவ ஹிந்து பரிஷத் அன்பர்கள் கலந்து கொண்டனர்.

கடிதம்

ANGEERASA S. VENKATESA SARMA (Sankaran Adimai) — Madras, 33. 10—12—88.

ஞானசம்பந்தம் ஐப்பசித் திங்கள் (10—11—88) இதழில் பிரசுரமாகியுள்ள, எனது பழம்பெரும் நண்பரும் அரும்பெறலன் பருமான, பாண்டிச்சேரி ரா. சுப்பிரமணியன் அவர்களது விஷ்ணு பக்தி என்ற கட்டுரையைப்படித்துப் பேரானந்தம் அடைந்தேன். வேதத்தில் புருஷன், பரமபுருஷன் என்றெல்லாம் சிவபிரானே போற்றப்படுகிறார். மஹாகவி காளிதாஸன் ஒரிடத்தில் திருமாலைப் புருஷோத்தமன் என்று குறிப்பிட்டுள்ளார். கதிரவன் ஒளியின் முன்னர் விண்மீன்கள் அத்தனையும் ஒளி இழப்பதுபோல வேதப் பிரமாணத்தின் முன் காளிதாஸனுதியரது வாக்குகளும் வலிமை யுடன் நிற்குமோ? வேதம் புருஷன் என்று சிவபிரானைச் சொல்லும் பொழுது அதில் உள்ள புருஷஸூக்தம் என்ற பகுதி எங்ஙனம் விஷ்ணுவைக் குறிக்கும்? எனவே புருஷஸூக்தம் சிவபிரானுடைய துதியே என்று நடுக்காவேரி ஸ்ரீநிவாஸ சாஸ்திரியார் என்ற பெரியவர் பாடியம் (விரிவுரை) இயற்றியுள்ளதாகத் தெரிகிறது. அதனையும் நமது ஞானசம்பந்தம் இதழில் பிரசுரித்தால் சிவ நேயர்கள் பெரிதும் மகிழ்ச்சியுறுவர். இத்தகைய அருமையான கட்டுரைகளைப் பிரசுரிக்கத் திருவுளம் பற்றிய ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்களது பொற்பாத கமலங்களில் அடியேனது வணக்கங்களையும் நன்றியையும் மீண்டும் மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

எதிர்காலம்

ஜோதிஷம் திரு. A. இராசமாணிக்கம்

ஓய்வுபெற்ற ஆசிரியர்

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நடுநிலைப்பள்ளி, திருப்பனந்தாள்.

(விபவஸு மார்கழிமீ 1வ முதல் 29வ முடிய)

(16—12—88 முதல் 13—1—89 முடிய)

விபவஸு கார்த்திகைமீ 1வ குருவாரம் பூரட்டாதி நக்ஷத்திரம் வணிஜைகரணம் கூடியகாலத்தில் சூரிய உதயம் முதல் 35 நாழிகை 17 விநாடிக்குக் கடக லக்கினத்தில் ஸ்ரீ உலக ரட்சகரான சூரிய பகவான் தேவதினப் பிராதகால விடியலில் விருச்சிக ராசியிலிருந்து தனுர் ராசியில் சங்கிரமணமாகப் பூலோகத்துக்கு மார்கழி மாதப் பிரவேசம் செய்தருளுகின்றார். மறுதினம் சுக்கிர வாரம் மார்கழி மாதம் முதல் தேதியாகும். இந்த தேவ தின விடியற்காலப் பொழுதாகிய மார்கழியில் மாந்தர்கள் அனைவரும் அருணோதயம் முன்பாகத் துயில் நீக்கி மா ம் பூராவும் குளிர்ந்த நீரில் ஸ்நானம் செய்து பரிசுத்தமாகித் தேவாலயம் சென்று ஈஸ்வரதரிசனம் செய்துவர இலட்சுமிகடாக்ஷம் ஏற்படும். சகலபாக்கியங்களும்உண்டாகும். மனக்களங்கம் நீங்கும், பூரணமனதில் நற்கிரியைகள் புரிய ஆற்றல் தரும். சங்கிரமண கால கிரக ஸ்திதியினால் உலகத்தில் சுபிட்சத்துடன் மக்கள் ஆக்கத்தொழில்களினால் முன்னேற்ற ஸ்திதியில் விளங்குவர். ஆன்றோர்களால் தேசங்களில் எங்கும் தேவாலயத் திருப்பணிகள் அறச்சாலைகளில் தர்மங்கள் வெகுவாக நடந்துவரும். நாடுகளில் ஜனங்கள் பொருளாதார மிகுதியில் நல்வாழ்க்கை நடத்துவர். அரசர்கள் செங்கோல் ஆட்சி செய்து பிரஜைகளை இரட்சிப்பார்கள். உலகெங்கும் உள்ள திருமடங்கள் ஆசாரியபீடங்களில் ஈஸ்வர கட்டளையில் வந்து சிவசமயம் பரிபாலிக்கின்ற சிவஞான குருமகான்கள் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானங்கள் லோக க்ஷேமத்துக்கு அருந்தவத்தில் இறைவனைப் பிரார்த்திப்பர். இத்தேவதின விடியலாகிய மார்கழியில் மக்கள் உஷத்காலத்தில் இறைவனை வழிபாடு செய்து பிரவிருத்திகளில் ஈடுபடுவதினால் ஏற்படும் உயர்வைத் தம் திருவாய் மலர்ந்து வியாக்ஞாபித்து அருள்வார்கள். தேசங்களில் எங்கும் தேவாலங்களில் நித்தியம் ஆறுகால பூசைகள் மார்கழி உஷத்கால ஆராதனைகள் சிறப்பாக நடைபெறும். எல்லா ஜனங்களும் இறைவனைத் தரிசித்து ஆனந்தமடைவர்.

குறிப்பு:- உத்தம தேகமுள்ள மாந்தர்களுக்குப் பகல் இரவாகிய ஒரு தினத்தில் 21600 உட்சுவாச நிட்சுவாசம் நடப்பதாகும். தேவர்களுக்கு உத்திராயணம் பகற்பொழுது. தெட்சணாயணம் இரவுபொழுதாகும். உத்திராயணம் தெட்சணாயணம் ஆகிய ஒரு ஆண்டில் 21600 உட்சுவாச நிட்சுவாசங்கள் நடப்பது ஒரு தேவதினம். இந்த தேவதினத்தில் மார்கழி மாதம் தேவர்களுக்குப் பிராதகாலம். ஆகையால் தான் ஸ்ரீ நடேசர் அபிஷேக வெண்பாவில்,

சித்திரையிலோண முதற் சீரானி உத்திரமாம்
சத்ததனு வாசிரையுஞ் சார்வாகும்—பத்திவளர்
மாசியரி கன்னி மருவு சதுர்த்தசிமன்
நிசரபிஷேக தினமாம.

என்று விளம்பியுளது காண்க. இவ்வெண்பாவில் கண்ட புனித நாளில் நடேசருக்கு மஹாபிஷேகம் செய்து வழிபாடு நடத்தப்படுவதாகின்றது. அனைவரும் நடேசர் தரிசனம் காண்க.

1. மேஷம் :- அசுவதி - பரணி - கார்த்திகை ¼

மேஷ ராசி 9 பாதங்களும் சுபபலன் தரும். பணவருமானம் கணிசமாக வரும். வித்துவத்துவம், கலைத்துறைகளில் புகழ் பரவும். டிசம்பர் 27 தேதிக்கு மேல் வரவேற்பு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளுதல், நல்லோர்கள் வருகை தருதல் ஆகும். வாகன சுகம், சௌக்கிய பலன் உண்டு பண்ணும். எல்லாச்செயல் திட்டங்களும் தெய்வபலனில் சிறப்பாக நடந்துகொண்டிருக்கும். ஜனவரி 3, 4, 5 தேதிகள் சந்திராஷ்டமம். ஞாயிறு, திங்கள் சுபம்.

2. ரிஷபம் :- கார்த்திகை ¾ - உரோகிணி - மிருகசீரிஷம் ½

ரிஷப ராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். பண வருமானம் அரச கண்யத்தில் வருவதாகும். வித்துவத்துவம், கலைத்துறையில் அரசாங்க நன்மையை ஏற்படுத்தும். பூமி பிராப்தியில் இயந்திர வகையில் முதலீடு செய்தல், சமபலனுதல் காணும். தாரம் புத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்து வரும். எல்லாவற்றிலும் காலதாமதம் ஆயினும் தெய்வ சகாயம் இருந்து நன்மையாக நடந்துகொண்டிருக்கும். ஜனவரி 6, 7 தேதிகள் சந்திராஷ்டமம். புதன், வியாழன் சுபம்.

3. மிதுனம் :- மிருகசீரிஷம் ½ - திருவாதிரை - புனர்பூசம் ¾

மிதுன ராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். பண வருமானம் வந்துகொண்டிருக்கும். வித்தியா வியாபாராதி, கலைத்துறையில் டிசம்பர் 27 தேதி ஆனால் அதிக பிரயோஜனம் உண்டு பண்ணும். பூமியில் இயந்திரங்களில் வருவாய் ஏற்படுத்தும். ஓர் தெய்வ கைங்கர்யம் செய்யும், எல்லாக்காரியங்களையும் நேர்மையுடன் உறுதிபாடாக நடத்திவரும். தாரம் புத்திரர்களுக்கு நலம் தரும். ஜனவரி 8, 9, 10 தேதிகள் சந்திராஷ்டமம். வியாழன், வெள்ளி சுபம்.

4. கடகம் :- புனர்பூசம் ¼ – பூசம் – ஆயில்யம்.

கடக ராசி 9 பாதங்களும் சுபமான பலனைத் தரும். பண வருமானம் மூன்று வகையில் வந்து சேரும். வித்துவத்துவம், கலைத் துறையில் அரசு லிகிதங்களில் நன்மைகளும் பிரசித்தமானஉயர்வும் ஏற்படுத்தும். ஜனவரி முதல் பூமியில் இயந்திரங்களில் அதிகபலன் வரும். எல்லாக்காரியங்களையும் கெடியானதோரணையில் வெற்றிகரமாக நடத்தி வரும். தாரம் புத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்து வரும். ஜனவரி 11, 12 தேதிகள் சந்திராஷ்டமம். சனி, ஞாயிறு சுபம்.

5. சிம்மம் :- மகம் - பூரம் - உத்திரம் ¼

சிம்ம ராசி 9 பாதங்களும் மிச்சிரபலனுக நடக்கும். பண வருமானம் கன்ய ஸ்திதிக்கு ஏற்ப வந்து சேரும். வித்தியா வியாபாராதி, கலைத்துறையில் டிசம்பர் 27 தேதி ஆனல் நன்மையும் அபிவிருத்தி பலனும்தரும். ஜனவரிமுதல் பூமியில் இயந்திரங்களில், செந்நெல் பிராப்தி ஆகியவற்றில் நிறைந்தபலன் ஏற்படச்செய்யும். ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிக்கு அருச்சனை செய்யவும்; விபத்துநீங்கும். எல்லாக்காரியங்களும் சாஸ்திரப்படி புனிதமாக நடந்துகொண்டிருக்கும். டிசம்பர் 16, 17, 18 தேதிகள் சந்திராஷ்டமம். டிசம்பர் 25, 26 இல் நல்லவகை செலவு. திங்கள், செவ்வாய் சுபம்.

6. கன்னி :- உத்திரம் ¾ - ஹஸ்தம் - சித்திரை ½

கன்னியா ராசி 9 பாதங்களும் மிச்சிரபலனுக நடக்கும். பண வருமானம் பெருமதிப்பில் வரும். வெள்ளைக்கல் பதித்த ஆபரணம் ஒன்று வாங்குதல் ஆகும். வித்துவத்துவம், கலைத்துறையில், உத்தி யோகத்தில் மேன்மை ஸ்திதியையளிக்கும். தெய்வஸ்தலம் செல்லுதல், நல்லோர் பிரபலஸ்தர்சந்திப்பு, மகிழ்ச்சி அளவலாவல் சம்பவிக்கும். தாரம் புத்திரர்களின் நலம் நன்ருக இருந்து வரும். டிசம்பர் 19, 20 தேதிகள் சந்திராஷ்டமம். புதன், வியாழன் சுபம்.

7. துலாம் :- சித்திரை ½ - சுவாதி - விசாகம் ¾

துலாராசி 9 பாதங்களும் சுபலன் தரும். பணவருமானம் அதிகம் வந்துசேரும். நடுநிலைப்போக்கு, சமூகநலம்காத்தல், மக்களால் வரவேற்கப்படுதல் ஆகும். எல்லாச் செயல்களிலும் வெற்றிப்பாதையை ஏற்படுத்திக் கொண்டிருக்கும். டிசம்பர் 27 தேதி முதல் இராஜகாரியங்கள் பொன்னேட்டில் பதிப்புக்குரிய செல்வாக்கு ஏற்படுத்திவரும். டிசம்பர் 30, 31 தேதிகள் ஓர் அர்ப்பணம் செய்யநேரும். தாரம், புத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். டிசம்பர் 21, 22 தேதிகள் சந்திராஷ்டமம். வெள்ளி, சனி சுபம்.

8. விருச்சிகம் :- விசாகம் ¼ - அனுஷம் – கேட்டை

விருச்சிக ராசி 9 பாதங்களும் மிச்சிரபலனுக நடக்கும். பண வருமானம் பெருமதிப்பில் வரும். வித்தியா வியாபாராதி, கலைத்

துறையில், உத்தியோகத்தில் அரசாங்க நன்மைகளும் பதவி உயர்வும் தரும். பூமியில் இயந்திர சாதனங்களில் விருத்திபலனை ஏற்படுத்தும். முயற்சித்த காரியங்களில் ஜெயப்பிராப்தியை ஏற்படுத்தும். தாம்பத்திய வாழ்வில் சுமுகம் நிலவும். டிசம்பர் 23, 24 தேதிகள் சந்திராஷ்டமம். ஜனவரி 2, 3 தேதியில் சுபசெலவு ஆகும். திங்கள், செவ்வாய் சுபம்.

9. தனுசு :- மூலம் - பூராடம் - உத்திராடம் ¼

தனுர் ராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். பண வருமானம் தரும். ஸ்திரி வழியினர் அல்லது டாம்பீக கௌரவத்தில் சுபச்செலவினை ஏற்கும். டிசம்பர் 27 தேதிக்குமேல் வித்துவத்துவம், கலைத்துறையில் உத்தியோகத்தில் நன்மதிப்பு, அரசு லிகித அனுகூலம், நல்விஷய பிரசங்க கீர்த்தி ஆகிய நற்பலன் ஏற்படச் செய்யும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்து வரும். டிசம்பர் 25, 26, 27 தேதிகள் சந்திராஷ்டமம். ஜனவரி 4, 5 தேதிகள் செலவினம். புதன், வியாழன் சுபம்.

10. மகரம் :- உத்திராடம் ¾ - திருவோணம் - அவிட்டம் ½

மகரராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். பணவருமானம் வெகுவாகவரும். மும்மடங்கு செலவும் செய்யும். மனோபலத்தில் எல்லாக்காரியங்களையும் செயல்படுத்தும். வித்யா வியாபாரதிகளில் கலைத்துறையில் வரவேண்டியவற்றில் விளம்பரம் அல்லது முன்பணம் முடங்கச்செய்யும். பின் நற்பலன் வரும். நல்லவர் பிரபலஸ்தர்களால் நன்மைகள் பல ஏற்பட்டுக் கொண்டிருக்கும். தாம்பத்தியவாழ்வாவில் சுமுகம் நிலவும். டிசம்பர் 28, 29 தேதிகள் அதிகசெலவு. வெள்ளி, சனி சுபம்.

11. கும்பம் :- அவிட்டம் ½ - சதயம் - பூரட்டாதி ¾

கும்ப ராசி 9 பாதங்களும் சுப பலனாக நடக்கும். பண வருமானம் மூன்று வகையில் வரச் செய்யும். வித்தியாவியாபாராதிகளில், கலைத்துறையில் விசேஷ நற்பலனை ஏற்படுத்தி வரும். சாஸ்திர சம்பிரதாயம் அனுஷ்டிக்கும். தெய்வீக நல்விஷயங்களில் மனம் செல்லும். பரம நிலைகாணும். ஜனவரி முதல், செயல் வீரம் மிகுந்து கிரியைகள் நடத்திவைக்கும். தாரம் புத்திரர்களின் நலம் நன்றாக இருந்துவரும். டிசம்பர் 30, 31 தேதிகள் சந்திராஷ்டமம். ஜனவரி 8, 9 தேதிகளில் செல்வினம். ஞாயிறு, திங்கள் சுபம்.

12. மீனம் :- பூரட்டாதி ¼ - உத்திரட்டாதி - ரேவதி.

மீன ராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். பண வருமானம் நல்ல வகையில் வந்து சேரும். வித்துவத்துவம், கலைத்துறையில் அரசாங்கநன்மையும் உத்தியோகத்தில் பதவி உயர்வும் அளிக்கும். ஜனவரியில் முன் எச்சரிக்கையாக விஷயம் வெளியிடுதல் நலம். ஓர் இக்கட்டான நிலைமை வந்து சமாளித்தல் ஆகும். ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிக்கு அருச்சனை செய்து வரவும். எல்லாக்காரியங்களும் இஷ்ட சித்தியில் நடந்து கொண்டிருக்கும். தாரம், புத்திரர்களின் நலம் நன்றாக இருந்துவரும். ஜனவரி 1, 2, 3 தேதிகள் சந்திராஷ்டமம். புதன், வியாழன் சுபம்.

மதிப்புரை

குமரகுருபர முனிவர் உணர்த்தும் சைவசித்தாந்தம்

[ஆசிரியர்: திரு. சி. சு. மணி. பக்கம் 64. விலை: ரூ. 6—00. வெளியீடு: அருள்நந்திசிவம் அருட்பணி மன்றம், 78, செல்விநகர், சிந்துபூந்துறை, திருநெல்வேலி-1. 627001.]

இந்நூல் குமரகுருபர சுவாமிகள் முந்நூறுவது ஆண்டு விழா நினைவாக வெளியிடப் பெற்றுள்ளது. "கயிலைமாமுனிவர்" வாழ்த்துரையுடன் கூடியது. சைவசித்தாந்தச் செந்நெறிபரப்பும் அன்பர் திரு. சி. சு. மணி குமரகுருபரரின் பிரபந்தங்களைச் சித்தாந்த நோக்குடன் கண்டு தெளிவாக எழுதியுள்ளார்.

கந்தர்கலிவெண்பாவில் சைவசித்தாந்தம் என்ற பகுதி சிறப்பாக அமைந்துள்ளது. குட்டிக் கந்தபுராணமாக விளங்கும் கந்தர் கலிவெண்பா சைவசித்தாந்த சாத்திரமாகவும் அமைந்துள்ளமை அறிஞர் பலரால் ஏற்கப்பட்ட உண்மையே! தருமை ஸ்ரீமாசிலாமணி தேசிகரிடம் ஞான உபதேசம் பெற்ற பின்பே ஸ்ரீ குமரகுருபரர் கந்தர்கலிவெண்பாவை அருளிச் செய்திருத்தல் கூடும் என்னும் இவ்வாய்வாளர் கருத்து மேலும் ஆராயத்தக்கது. சைவ சமய அருளாளர்கள் பற்றிக் குமரகுருபரர் கூறுவன, பிரபந்தங்களில் பதி, பசு, பாச இயல்புகள்-ஆகிய கட்டுரைகள் சுவைகூட்டுவனவாய் அமைந்துள்ளன.

இனிய எளிய நடையில் அமைந்தது இந்நூல். சமய உலகும், தமிழுலகும் பாராட்டத்தக்க நன்முயற்சி.

— கா. ம. கண்ணப்பன்.

கடிதம்

சு. மு. சுந்தரராஜன் — திருவாரூர், 9—11—88.

தீபாவளிப் பண்டிகையைப் பற்றியும், இஃது இந்தியா முழுவதிலும் கொண்டாடப்படுகின்ற ஒரு தேசியத் திருவிழா என்பதனையும், எண்ணெயில் இலக்குமியும், வெந்நீரில் கங்கையும் உளது என்பதனையும் இதனாலேயே பலர் காசியில் கங்கையில் நீராடி இவ்விழாவினைக் கொண்டாடுகின்றனர் என்பதுடன், வடக்கே இலக்குமி பூஜையும், தெற்கே கேதாரகௌரி விரதமும் பின்பற்றப் படுகிறது என்றும் அருளியதுடன், நரகாசுரரின் வரலாற்றையும் திருவாய்மலர்ந்தருளி இப்பண்டிகையைக் கொண்டாடுவதன் மூலம் இருள் நீங்கி ஒளிபெற்றுத் துன்பம் நீங்கி இன்பமாய் அனைவரும் வாழலாம் என்று ஆசி அருளிய ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் திருவடித் தாமரைகளை மனமொழி மெய்யால் வணங்குகிறேன்.

அனைத்துலக சைவசித்தாந்த
ஆராய்ச்சி நிறுவனம்
இதழ்வழிச் சைவ சமயக்கல்வி-IV
பாடம் - 9.

பண்டார சாத்திரங்கள் :

சித்தாந்த நிச்சயம்

பேராசிரியர், முனைவர், திரு. கு. சுந்தரமூர்த்தி

பண்டைக் காலத்திருந்தே தமிழர்தம் வாழ்வியலில் ஒழுக்க நெறிகளும், அவற்றின் பயனாக அடையத்தக்க ஆன்மீகநெறிகளும் தழைத்துச் செழித்து இருந்தன. இவ்வுண்மை தொல்காப்பியம், திருக்குறள் முதலிய பண்டைப்பனுவல்களானும், அகழ்வாராய்வுகளானும் நன்கு புலனாகின்றன. இவ்விரு நெறிகளும் காலப் போக்கில் மேன்மேலும் வளர்ந்திருந்தமையை அவ்வக்கால இலக்கியங்களால் அறிய முடிகின்றது. உயிரினங்களுள் உயர்ந்துநிற்கும் மனிதஇனம் இவ்விருநெறிகளையும் வகுத்தமைத்துக் கொண்டு வாழ்ந்தமைக்குக்காரணம் அம்மனித இனத்தின் மாட்டு உயர்ந்து வளர்ந்திருந்த சிந்தனைத் தெளிவேயாகும். தாம்யார்? தமக்குத் தலைமையாக விளங்குவது எது? அதனை அடைதற்கு மேற் கொள்ளத்தக்க நெறிமுறைகள் யாவை? அந்நெறி முறைகளைக் கொண்டொழுகுங்கால், எதிர்ப்படும் தடைகள் எவை? அவை ஏற்படக் காரணம்என்ன? அவற்றைக் களைதற்குரிய வழிவகைகள் யாவை? என்றெல்லாம்எண்ணி, அதன்முடிவாகக் கண்டபொருள் மூன்றும். அவையே இறை, உயிர், தளை என்பனவாம். இம்முப் பொருட்குரிய இயையும் எழுச்சியும், விளைவும் இனைய என்பதை வகுத்துக்கூறும் முகமாக எழுந்த சிந்தனைகள் தத்துவச் சிந்தனை எனப்படும். சிவபரம் பொருளே முதல் எனக் கண்ட இனம் இவ்வகையில் எண்ணி முதிர்ந்து வளர்வதாயிற்று. இச்சிந்தனைக் கூறுகளை அடிப்படையாகக் கொண்டிலங்குவது சைவசித்தாந்த மாகும். இச்சிந்தனை பண்டைக்காலம் முதலே எண்ணப்பெற்று வளர்ந்து வந்திருப்பினும் அவற்றைத் தொகுத்தும் தனித்தும் எண்ணிய காலஎல்லை கி. பி. 12 முதல் 14 வரையாகும். இக்கால எல்லையில் எழுந்த நூல்கள் ஞானமிர்தமும், மெய்கண்ட சாத்திரங்கள் பதினான்குமாகும்.

திருநாவுக்கரசுதேசிக சுவாமிகள் :

இவ்வாறு வளர்ந்து முதிர்ந்த அரிய சிந்தனையை மக்கள் மனத்தில் வித்திட்டு வளர்க்க எழுந்த நிறுவனங்களே திருமடங்களாகும். இத்தகைய திருமடங்களில் திருக்கயிலாய பரம்பரை வழியில் வந்த தருமை ஆதீனத் திருமடம் குறிப்பிடத்தக்கதாகும். இத்திருமடத்தின் ஒன்பதாவது குருமூர்த்திகளாக விளங்கியருளியவர்கள் திருப்பெருந்திரு திருநாவுக்கரசுதேசிக சுவாமிகள் அவர்கள் ஆவர்.

அருட்சிறப்பும் அருளிய நூலும் :

கி. பி. 1700 முதல் 1715 வரை வாழ்ந்தருளிய இக் குருமூர்த்திகள் ஒன்றிரண்டும் அறச் சிவானந்த வாரியுள் தோய்ந்தருளியவர்கள். ஒருகால் இவர்கள் புள்ளிருக்கு வேளூர் செல்வமுத்துக்குமாரசுவாமியை வழிபட எழுந்தருளிய பொழுது அப்பெருமான் தம்முன் இருந்த திரை விலகக் காட்சி கொடுத்தருளினார். 'மாயைத் திரை இறந்தால் காண்கின்ற தேவு' என்பது இதனாலும் புலனாகின்றது. திருமாலே பரம்பொருள் எனத்தம்முன் வாதிட்ட வைணவன் ஒருவன் ஊமையாயினன். பின் தன் தவறுணர்ந்து இக்குருமூர்த்திகளிடம் வேண்ட, ஊமை நீங்கப் பெற்றனன். தம்முள் பகைத்துப் போர் செய்த அஃறிணைப் பொருள்களும் பகை நீங்கி இயைந்து வாழ அருள் பாலித்த பெருமை யுடையவர்கள் இவர்கள்.

" கான மருங் கிள்ளையொரு குயில்செம் போத்துக்
 கட்டரவம் பூனை எலி கதியிற் சேர
ஞான அருட் பார்வைபுரி நாதா போதா
 நாடறியேற் குனதருளே நயப்ப தென்னாள்
வான மருங் கடம்பவனச் சவுந்த ரேசன்
 மலரடியை யலரடியால் வணங்க வெண்ணித்
தானமரும் பூசைபுரி திருநாவுக் கரச
 சம்பந்த ஞானகுரு தருமை வாழ்வே "

எனும் பாடல் இவ்வுண்மையை விளக்கும். இத்தகைய அருள்நலம் பழுநிய குருமூர்த்திகள் தம் முதிர்ந்த அனுபவப் பயனாக வழங்கியருளியது சித்தாந்த நிச்சயம் எனும் நூலாகும்.

சித்தாந்த நிச்சயம் : அமைப்பும் அழகும் :

சைவ ஆகமங்களில் கூறப்பட்டிருக்கும் பொருள்திறனே முடிந்த முடிபு என இந்நூல் கூறலின் சித்தாந்த நிச்சயம் எனப் பெயர் பெறுவதாயிற்று. இப்பெயர் குருமூர்த்திகளாலேயே இடப்பெற்றதாகும். இதனைச்

" சித்தாந்தம் யாதென்று சிந்திப்பவர்தமக்குத்
சித்தாந்த நிச்சயத்தைச்செப்பவே — முத்தனும்
ஐம்முகத்தான் தந்த அருட்கதிரோன்போல் விளங்கும்
கைம்முகத்தா னேமிகவும் காப்பு "

எனவரும் காப்புச் செய்யுளால் அறியலாம். இந்நூல் 101 பாடல்களையுடையது. ஆசிரியவிருத்தத்தாலாயது. செய்யுட்கள் பலவும் ஆற்றொழுக்கான நடையமைப்பையுடையது. உவமை நலஞ் சான்றது. எனினும் ஏகான்மவாதம், சிவசமவாதம், ஈசுவரஅவிகாரவாதம், பரிணாமவாதம், சிவாத்துவிதம் ஆகிய கோட்பாடுகளை மறுத்துச் சுத்தாத்துவித சைவசித்தாந்தப் பெருநெறியினை விளக்கும் முகமாக இந்நூல் அமைந்திருத்தலின், அவ்வக்கோட்பாடுகளையும் முற்ற உணர்ந்தார்க்கன்றி விளங்குதற்கு அரிதாக அமைந்துள்ளது.

நுவலும் பொருள் :

ஆணவம் உயிரைத் தகைத்து நிற்கும் என்றும், அவ்வாறு தகைத்து நிற்பினும் அது தன்னைக் காட்டாது என்றும், உயிர் தனி நிலை (கேவலம்), கட்டு நிலை (சகலம்), வீட்டுநிலை (சுத்தம்) ஆகிய மூவகை நிலைகளையும் பெறும் என்றும், மாயையின் விளைவாய உடல், உலகு, கருவிகளெல்லாம் உயிர்க்கு விளக்கம் தருவதன்றி மறைத்தற்குரியன அல்ல என்றும், ஆணவமலம் நீங்க இறைவனின் அருட்சத்தி பதியுமென்றும், அவ்வாறு பதிந்த நிலையில் உயிர் இறையடி அடைந்து இன்புற்றிருக்கும் என்றும் ஏதுக்களாலும், எடுத்த மொழியாலும் இந்நூல் விளக்கி நிற்கின்றது. சைவ சித்தாந்தத்துள் கூறப்படும் இறை, உயிர், தளை என்பன என்றும் தோற்றமில் காலத்தன என்பதும், உள்பொருளில் இருந்தே பிறிதொரு பொருள் தோன்றும் (சற்காரியவாதம்) என்பதும் இச்சமயத்தார்க்கு அமைந்த அடித்தளமாய கொள்கைகளாகும்.

'' சைவத்தில் எல்லாப் பொருளும் அநாதித் தகைமையென்று
மெய்வைத்த ஆகமம் சற்காரி யத்தை விளம்புவதும் ''

எனவரும் பாடலால் இவ்வுண்மை விளக்கப்படுகிறது. இப்பொருண்மையையும், சிவசமவாதம் முதலிய பிறசமயக் கோட்பாடுகளையும் விளக்கும் முகமாகக் குருமூர்த்திகள் கூறும் செய்திகள் பலவேனும் சில சிறப்பாகக் குறிப்பிடத்தக்கனவாம்.

ஆசிரியர் :

இந்நூலையருளியவர் தருமை ஆதீனத்து ஒன்பதாவது குருமூர்த்திகளாக விளங்கிய திருநாவுக்கரசு தேசிக சுவாமிகள் என முன்னரும் கூறப்பட்டது. இதனை,

" ஒருமை தருஞ்சிவ ஞனந்த முத்திய தொன்றெழியப்
பெருமைசெய் முத்தி பிரானுக் கிணையென்னும்பித்தர்
[சொன்னித்து
அருமை யுடையசித் தாந்தமீ தென்ன வருளுருவாந்
தருமையில் நாவுக் கரசசம் பந்தனும் சாற்றினனே" (5)

எனும் பாடல் அகச்சான்றய் நின்று விளக்குகின்றது.

ஆசிரியரின் குருமூர்த்திகள் :

இக்குருமூர்த்திகளுக்கு ஞானசிரியராக விளங்கியருளியவர்கள் தருமை ஆதீனம் எட்டாவது குருமகாசந்நிதானம் அழகிய சிற்றம்பலதேசிக சுவாமிகள் அவர்கள் ஆவர். இதனை,

" ஒருமைய தாகுஞ் சிவானந்த முத்தி யிணையொழியப்
பெருமைசெய் முத்தி பிரானுக் கிணை யெனப் பேசுவது
பருமை யொழியும் இன் சித்தாந்தம் ஈதெனப்பாரில்வந்து
தருமை யழகிய சிற்றம் பலகுரு சாற்றினனே." (5A)

என இந்நூற்கண் வரும் பாடல் விளக்குகின்றது.

மெய்கண்டார் :

புறச்சந்தான குரவரில் முதற்குரவாக விளங்கியருளியவர் இவர். இவர்தம் கருத்தே வலிவுந் தெளிவும் உடையதென ஆசிரியர் போற்றி மகிழ்வதை,

" நல்லார்கள் போற்றிய மெய்கண்ட நாதன் நயந்தளித்த
சொல்லா கமப்பொருள் தன்னைவிட்டு அன்னியம் சொல்லும்
[இந்தக்
கல்லார் மருட்சொற் கழித்துச்சித் தாந்தக் கருத்திதெனப்
பொல்லாத பிள்ளை யிணையடி போற்றிப் புகலுதுமே "

" மெய்கண்ட தேவனருளாற் சிவாகம மெய்ப்பொருள்தேர்ந்து
ஐயமில் மெய்யடி யாருக் களித்ததை யாய்ந்தவர்போற்
பையவுள் வந்து பொருண்மாறு பாடு பகர்ந்தவர்க்கே
செய்ய பொருளவன் செப்பிய வாறிவண் செப்புதுமே"

எனவரும் பாடல்கள் விளக்கி நிற்கின்றன.

சிவசமவாதி :

வீடுபேற்று நிலையில் உயிர் இறைவனோடு ஒப்பாகும் என்பது இவர் கருத்தாகும். இக்கருத்தைக் குருமூர்த்திகள் மிக வன்மையாக மறுக்கின்றார்.

" முத்தி சிவனுக்கு இணையன்று". (3)

எனும் பகுதி இதனைத் தெளிவுறுத்தும். இவ்வாறு ஓதுவோர்க்குப் போகமன்றிப் பரமுத்தி என்பதில்லை என மேலும் கூறுவாராக,

"ஆகம வேத புராணாதி யாய்ந்த வருளுடையோர்
ஏகன தானந்த மேமுத்தி யென்ன விசைத்ததனை
யூக மிலாது சிவசம முத்தியென் றோதினர்க்குப்
போக மலாது பரமுத்தி தானும் பொருந்தலின்றே". (4)

எனச்சற்றுவன்மையாகவும்கூறிமறுக்கின்றார். அன்றியும்இவ்வாறு கூறுவார் பித்தர் என மேலும் கூறுவர்.

"ஒருமை தருஞ்சிவ ஞனந்த முத்திய தொன்றெழியப்
பெருமைசெய்முத்தி பிரானுக் கிணையென்னும்பித்தர்சொல்"

எனும் பகுதி இதனை விளக்கும்.

அணைந்தோர் தன்மை:

திருவருள் வலத்தால் உயர்ந்து இறைவனின் திருவடியையே உளத்தால் அணைந்து நிற்கும் அருளாளர்கள் தம்மளவில் என்றும் துன்புறுவதில்லை. ஒரோவழித் துய்க்க விருக்கும் ஊழின்எச்சத்தால் துன்பம்வரினும் அதனைத் துன்பமாகக் கொள்ளார். எனினும் பிற உயிர்கள் படும் துன்பங்களைக் கண்டு தாம் துன்புறுவதில் இவர்க்கு இணையில்லை. இத்துன்பம் அவர்களுக்கு என்ஞான்றும் உண்டு. இதனைக்,

"கள்ளத் தலைவர் துயர் கருதித்தம் கருணை
வெள்ளத்து அலைவர் மிக".

எனவரும் திருவருட்பயனும் நன்கு விளக்கும். நம் குருமூர்த்திகள் இதனை உளங்கொண்டு கூறும் பாடல் எண்ணற்குரியதாம்.

"மன்னவ னாலும் வியாதியி னாலும் மறம்புரியத்
துன்னு மனிதர் மிருகாதி யாலுந் கொகுநிரயத்
தின்னிவி னாலு மிளைக்கு முயிர்கண் டிரங்குமுத்தர்க்
குன்னிய துன்பம்விட் டின்பமெக் காலு முறுவதின்றே." (71)

என்பது அவர் தம் திருவாக்காகும்.

வீடுபேற்றுநிலை :

உயிர் வீடுபேறடைந்தக்கால் எந்நிலையில் இருக்கு மென்பதில் பலரும் கருத்து வேறுபடுவர். அவர்களில் ஒருவர் வீடுபேற்று நிலையில் உயிர் எவ்வித இன்பதுன்பமும் இன்றிக் கல்லெனக் கிடக்கும் என்பர். இவரைப் பாடாணவாதிகள் என்றழைப்பர். இவ்வாறு இன்பதுன்பம் இன்றிக் கல்லெனக்கிடத்தற்கோ உயிர் இத்துணை முயற்சி செய்யவேண்டும்? பல்லூழிக்காலம் பயின்று அரனை அர்ச்சிப்பதெல்லாம் அவன் அருள் பெறவும் அதன் வழிப் பேரின்பப் பெருவாழ்வை அடைவதுமே அன்றோ? இதனை நம் குருமூர்த்திகள்,

"முத்தி யின்பமுண் டென்றே மொழிந்தனர் மூதறிவோர்
சித்தி யடைந்த வியோகரு மின்பஞ் செறிந்தனரால்
நித்திய மாகிய வின்பமின் றென்ன நிகழ்த்துவதென்
இத்தன்மை கேவல மெய்தினர் தங்க ளியல்பதுவே." (78)

எனவரும் பாடலால் குறித்தருளுவர்.

அறவுரை :

தத்துவ நூல்களில் உலகினருக்கு அறங்கூறும் பாங்கு அமைதலும் உண்டு. நம் குருமூர்த்திகளும் அவ்வாறு ஓரிடத்துக் கூறியுள்ளார்.

"பெற்றௌன் றுயர்த்தான் பிறவிப் பெருந்துயர் பிற்பட்டிட
முற்றும் பரபோகந் துய்ப்பித் திடுதலை முன்னுகவே." (81)

என்பது அவ்வறவுரையாகும். சிவஞானசித்தியாரில்,

"உள்ளபோதே பார்உய்ய," "ஒருகால் வணக்குநீர்
அரனை என்றும் வானவர் வணங்க வைப்பான்"

எனவரும் அறவுரைப் பகுதிகளை இக்கூற்று நினைவு படுத்துகின்றது. இவ்வாறு மெய்ப்பொருள் கூறும் ஆசிரியர்கள் இடையே ஆற்றுப் படுதற்குரிய அறவுரைகூறுவது நம்மீது வைத்த கருணையினாலாகும்.

ஞானுமிர்தம் :

இந்நூல் வாகீசமுனிவரால் இயற்றப் பெற்றது. மெய்கண்ட சாத்திரங்கள் பதினான்கிற்கும்முந்தியது. இந்நூலைக் குருமூர்த்திகள் இருபாடல்களில் குறித்தருளுகின்றார்.

"மன்னும் பிரபஞ்ச போக முயிருக்கு மற்றரற்கின்
றென்ன மொழிந்திடும் ஞான வமிர்த மிசைந்திடவே
சொன்ன நற்காரியங் காசினி யென்பதுஞ் சொற்றிலரோ
பன்னிய தோட மதனைப் பகர்ந்தது பண்பினையே."

"ஊனுர் பிரபஞ்ச போக மரற்கின் றுயிர்க்குண்டென
ஆனத காரியங் காசினி யென்னு மகவறன்னை
ஞான வமிர்தத்துச் சொல்லி யிருப்பது நாடிலையோ
மானுர் கரனுக்குத் தோடமுண் டென்பது வார்த்தையின்றே.

என்பது அப்பாடல்களாகும். (இவ்விரு பாடல்களிலும் அமைந்துள்ள பொருண்மை ஒன்றுகவே உள்ளது. இவை தஞ்சை சரஸ்வதி மகால் பதிப்பில் உள்ளவை.)

சிவஞானசித்தியார் :

இக்குருமூர்த்திகள் இந் நூலைத் தம் மேல் எல்லையாகக் கொண்டு போற்றுகின்றார். அணைந்தோர் இருள்மலம் நீங்க அரனடிக்கீழ்

இருப்பர் என்றும், உலகியற் பொருள்களைத் தம் அகத்தானும் எண்ணார் என்றும் சிவஞானசித்தியார் கூறுகின்றது. இவர் இறைவன் வழங்கும் சிவஞானத்தை மாந்தித் திளைத்திருப்பர் என்றும் இந்நூல் கூறுகிறது.

''பரஞானத் தாற்பரத்தைத் தெரிசித்தோர் பரமே
பார்த்திருப்பர் பதார்த்தங்கள் பாரார் பார்க்க
வருஞானம் பலஞான மஞ்ஞான விகற்பம்
வாச்சியவா சகஞானம் வயிந்தவத்தின் கலக்கந்
தருஞானம் போகஞா திருஞான ஞேயந்
தங்கியஞா னஞ்சங்கற் பனைஞான மாகும்
திருஞான மிவையெல்லாங் கடந்தசிவ ஞான
மாதலாற் சீவன்முத்தர் சிவமேகண் டிருப்பர்.''

எனச் சிவஞானசித்தியார் கூறும். இப்பாடற் பொருண்மையினையும், பாடல் தொடர்களையும் பொன்னேபோல் போற்றிய குருமூர்த்திகள் இருபாடல்களில் அவ்வருமையை எடுத்துப் பாராட்டுகின்றார்.

''ஆருப் பரம்பார்த் திருப்பர் பதார்த்தம்பா ரார்களென்றும்
சீரு விருண்மல நீங்க வரனடிக் கீழிருப்பார்
மாருச் சிவானு பவமாவி யென்றும் வயிந்தவமோ
தேருக் கலக்கமென் றுஞ்சித்தி நூலிடைத் தேர்ந்தனமே.''

''சொன்னநற் சித்தியி னுண்மையை நீயுந் துணிந்தறிய
முன்னவ னனந்தந் தன்னமு தார முயன்றருந்திப்
பின்ன மிலாம விருப்பரென் றுகமம் பேசியதால்
அன்னியம் விட்டுச் சிவாநந்த முத்தியென் றேயறையே.''

என்பன அப்பாடல்களாம்.

பதிப்புக்கள் :

இந்நூல் தருமை ஆதீனத்தில் இருந்த படியோடு சீகாழி ச. சதாசிவ முதலியாரின் படியோடும் ஒத்துப்பார்த்துச் சீகாழி. ப. அ. முத்துத்தாண்டவராய பிள்ளையால் 1928 இல் முதன் முதல் பதிப்பிக்கப் பெற்றுள்ளது. இதனை அடுத்துச் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார் 1934இல் பதிப்பித்துள்ளனர். இதன்பின் தஞ்சை சரஸ்வதி மகால் நூல்நிலைய வெளியீடாக 1968இல் வெளிவந்துள்ளது. இன்று காணக்கிடைக்கும் இம்மூன்று பதிப்புகளிலும் பல்வேறு பாடவேறுபாடுகள் காணப்படுகின்றன. பாடல்எண்ணிக்கையும் வேறுபட உள்ளன.

பாடல் எண்ணிக்கை :

முத்துத்தாண்டவராயபிள்ளைபதிப்பில் 98பாடல்கள் உள்ளன. கழகப்பதிப்பில் 101பாடல்கள் உள்ளன. சரஸ்வதி மகால் பதிப்பில் 129 பாடல்கள் உள்ளன. கழகப்பதிப்பில் இந்நூலை இயற்றியவர் சிவாநந்த தேசிகர் என உள்ளது. இவர் குடவாயில் சிவப்பிரகாச தேசிகரின் மாணவர் என்றும், 18ஆம் நூற்றுண்டினர் என்றும், சைவ சித்தாந்தசாரம் எனும் நூலையும் இவர் இயற்றியுள்ளார் என்றும் அப்பதிப்பில் குறிக்கப்பெற்றுள்ளது. அவ்வாறு குறிக்கும் அப்பதிப்பில் முத்துத்தாண்டவராயபிள்ளையின் ஏட்டுச் சுவடிகளி லிருந்து படி எடுக்கப் பெற்றது என்றும் குறிக்கப்பெற்றுள்ளது. எனினும் சிவானந்த தேசிகரால் இயற்றப்பெற்றது என்றதற்கு எவ்விதக் காட்டும் அப்பதிப்பில் இல்லை. எனவே, இக்கூற்றுப் பொருத்தம் உடையதன்று. கழகப் பதிப்பில் கடவுள் வணக்கப் பாடலாகப் பொல்லாப்பிள்ளையார் வணக்கம் அமைந்துள்ளது. இப்பாடல் ஏனைய இருபதிப்புக்களிலும் இல்லை. சித்தாந்தம் யாதென்று எனத் தொடங்கும் பாடல் கழகப் பதிப்பிலின்று. ஏனைய பதிப்புக்களில் உள்ளன. கழகப்பதிப்பில் 11, 12, 57, 58, 60, 61, 62, 70, 77, 78, 79, 80, 81, 82, 98, 99, 100, 101 ஆகிய பாடல்கள் சிதைந்து காணப்படுகின்றன. முத்துத்தாண்டவராய பிள்ளை பதிப்பில் பாடல்கள் பெரிதும் சிதைவின்றி உள்ளன. தஞ்சை சரஸ்வதி மகால் நூல் நிலையப் பதிப்பில் 49, 52, 100, 115 ஆகிய எண்ணுள்ள பாடல்கள் சிதைந்துள்ளன. இவ்வாற்றுன் இப்பதிப்புக்களில் ஒருமை காண இயலாத நிலையில் பொருள் தெளிவும், பொருள் தொடர்பும் புலனுகாது உள்ளன. சரஸ்வதி மகால் நூல் நிலையப் பதிப்பில் இந்நூற்கு அமைந்த உரை என ஒன்றும் காணப்படுகிறது. ஆயினும் அதனை இயற்றியோர் பெயர் யாதும் காணப்பட்டிலது. உரையும் இந்நூற்பொருளுக் கியைந்த மேற்கோள்களுடன் விளங்குவதன்றி வேறு விளக்கம் பெற்றிலது. எனினும் இவ்வுரையாசிரியர் சிறந்த புலமை உடையார் என்பதை அம்மேற்கோள் பகுதி காட்டுகின்றது.

நிறைவுரை :

இவ்வாறு நம் குருமூர்த்திகள் தாம் திருவருளில் அழுந்தி அறிந்த அனுபவத்தால் கூறப்பெற்றிருக்கும் செய்திகள் பலவாம். அவற்றை அறிதற்கு இவ்வறிமுகம் தூண்டுகோலாகும்.

உ
குருபாதம்

ஞானசம்பந்தம்

47 ஆம் ஆண்டு மலர்ப் பொருளடக்கம்

எண்	தலைப்பு	பக்க எண்
1	அச்சுமாறிவரும் ஆன்மா	11
2	அபிராமி அந்தாதி	17, 75, 130, 187, 243, 298, 353, 409, 465, 521, 579, 633
3	அபிராமி அந்தாதி ஆராய்ச்சி – ஓர் அநுபவம்	179
4	அப்பர் வழங்கிய ஆன்மீகச்செல்வம்	516, 587, 645
5	அவனி கந்தர்வ ஈசுவரகிரகம்	478, 534, 587, 645
6	அருளறம் பூண்ட துறவோர்	64
7	ஆண்டு மலர்கிறது	241
8	ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி	643
9	இதழ்வழிச் சைவ சமயக் கல்வி III பாடம் 11	49, 103
10	இதழ்வழிச் சைவ சமயக் கல்வி IV பாடம் 1, 2, 3, 4, பாடம் 5, 6, 7, 8.	161, 217, 273, 329, 385, 441, 497, 553, 609, 665
11	எதிர்காலம்	44, 99, 155, 213, 268, 325, 381, 437, 493, 549, 605, 661
12	என்ன சொல்லி எளியன் வாழ்த்துவன்!	86
13	ஏயர்கோன் கலிக்காமர்	45, 89, 145
14	கடிதம்	212, 370, 424, 528, 626
15	கடிதங்கள்	143, 255, 267, 301, 308, 315
16	கல்வி உலகத்திற்குத் தமிழ் (2)	65, 121, 183, 256

எண்	தலைப்பு	பக்க எண்
17	காசியில் மூன்றாவது அனைத்துலக சைவசித்தாந்த கருத்தரங்கம்	565
18	கழறிற்றறிவார்	653
19	குமரகுருபரர் – சிலசிந்தனைகள்	404
20	குருபூஜைவிழா - திருநாள் விபரம்	240
21	சச்சிதானந்தப் பிள்ளையார் கோயில் கல்வெட்டு	430
22	சாக்கிய நாயனார்	371
23	சிறப்புலி நாயனார்	427
24	சிறுத்தொண்டர்	484
25	சுதந்திர இந்தியாவின் இன்றைய நிலை	237
26	செத்துப்பிறவாதார்	426
27	செயல்படும் விமரிசனம்	29
28	செய்திகள்	41, 95, 150, 210, 263, 321, 376, 433, 488, 544, 601, 661
29	சைவசமயமும் பரிணாமக் கொள்கையும்	294, 365
30	சைவ சித்தாந்த மாலை நேரக் கல்லூரி	491
31	ஞானவேள்வி	129
32	ஞானானுபூதி சொன்ன நற்குரவர்	281
33	தண்டியடிகள்	258
34	தருமை ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் வழங்கிய ஆசியுரை	6, 61, 117, 174, 230, 287, 341, 398, 453, 511, 556, 623
35	தருமை ஆதீனத்தில் சிறப்பான வரவேற்பு	127
36	தருமையம்பதியும் தவமுனிவர் குமரகுருபரரும்	421
37	திருக்குறள் இசைப்பாடல்	297
38	திருச்சிற்றம்பலத்தில் கிராமவாசிகள் சார்பாக, வரவேற்பு வணக்க மடல்	577

எண்	தலைப்பு	பக்க எண்
39	திருத்தருமை ஆதீனம் ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி பெருவிழா	அ
40	திருமுறைகளில் மனவலிமை	199
41	திருமூலர்	205
42	திருவருட்பாத் திரட்டு	25
43	திருவருள் ஒத்தாசை	464
44	திருவாரூர்த் தியாகேசர் திருக்கோயில் குடமுழுக்குக் காணவாரீர்!	169
45	திருவேணி சங்கமத்தில் சரஸ்வதி	198
46	தோத்திர சாத்திர ஒப்பாய்வுக் கருத்தரங்கம்	349
47	தோண்டி எடுக்கப்பட்ட அபூர்வமான சிவலிங்கம்	367
48	நமது குலதெய்வம்	293
49	நல்லக்குடித் தலச்சிறப்பு	313
50	நாட்டின் நிலைபற்றிச் சிந்திப்போம்	113
51	பாரதப்பிரதமரின் வைத்தீஸ்வரன்கோயில் வழிபாடு	458
52	பார்வையாளர் குறிப்பு (நகல்)	324, 457, 460, 468, 473, 477, 524, 582, 648
53	புத்தாண்டில் ஞானசம்பந்தம்	1
54	புத்தாண்டுச் சிந்தனைகள்	242
55	பெற்ற சுதந்திரம் பேணிக்காப்போம்!	449
56	பொங்கல் வாழ்த்து	73
57	பொன்விழா ஆண்டை நோக்கி	16
58	போதமும் சித்தியும்	83, 133, 252, 309, 357, 418, 474, 525, 592, 649
59	மக்களும் தத்துவக் கல்வியும்	337
60	மதிப்புரை	572
61	முதல்வர் மறைந்தார் - முதல்வர் வாழ்க!	57

எண்	தலைப்பு	பக்க எண்
62	மூர்க்கர், சோமாசிமாறர்	316
63	மேலைநாட்டுத் தத்துவ மேதைகள்	21, 78, 138, 193, 247, 302, 360, 413, 469, 529, 583, 637
64	வருவாய் நீ! முருகா!	185
65	விகடச் சக்கர விநாயகர் - விளக்கம்	307
66	விஷ்ணுபக்தி	627
67	வைச்வ வேதம்	33
68	ஸ்ரீ கமலை ஞானப்பிரகாசர் - ஸ்ரீ கயிலைக் குருமணி குருபூஜை விழா	561
69	ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் 300 ஆவது ஆண்டு நிறைவு விழா	225
70	ஸ்ரீ குருஞானசம்பந்தர் மிஷன் (மருத்துவம்) 1980-81 வரவு செலவுப்பட்டியல்	71
71	ஸ்ரீ குருஞானசம்பந்தர் மிஷன் (மருத்துவம்) 1980-81 முதல் 86-87 வரை வரவு செலவுப்பட்டியல்	72
72	Good Progress	570
73	Welcome address Presented to Rajiv Gandhi	461



உ

சிவமயம்

மார்கழி மாதச் சிறப்பு நாட்கள்

16—12—88 வெள்ளி, தனுர் மாத பூஜாரம்பம்.

17—12—88 சனி, பிரளயகல்பாதி. ஸ்ரீ வாயிலார் நாயனுர் குருபூஜை.

18—12—88 ஞாயிறு, தருமை ஆதீனம் 11 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சச்சிதானந்த தேசிக சுவாமிகள் குருபூஜை.

19—12—88 திங்கள், சர்வபீஷ்ம பரமபத வைகுண்ட ஏகாதசி.

20—12—88 செவ்வாய், பிரதோஷம். கிருத்திகை விரதம். வேளூர் கிருத்திகை. தருமை ஸ்ரீ சண்முகர் அபிஷேகம்.

22—12—88 வியாழன், பௌர்ணமி விரத பூஜை. பசுநெய் அபிஷேகம்.

23—12—88 வெள்ளி, ஊஞ்சல்உற்சவம். இரவு ஸ்ரீ நடராஜர் அபிஷேகம். பௌர்ணமி விரதம். இரவு ஸ்ரீ மாணிக்கவாசகருக்குக் காட்சி. ஸ்ரீ சடையனுர் நாயனுர் குருபூஜை.

24—12—88 சனி, ஸ்ரீ ஆருத்ரா தரிசனம். திருவையாறு தீர்த்தம். திருக்கடவூர், ஸ்ரீ ஆட்கொண்டார் வடைமாலைக் காட்சி. திருவெம்பாவை உற்சவ பூர்த்தி. தருமை ஆதீனம் 2 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ ஆனந்த பரவச தேசிக சுவாமிகள் குருபூஜை.

27—12—88 செவ்வாய், ஆயில்ய விழா.

28—12—88 புதன், கர்ப்போட்ட ஆரம்பம். 38-31.

30—12—88 வெள்ளி, ஸ்ரீ இயற்பகை நாயனுர் குருபூஜை.

31—12—88 சனி, காளாஷ்டமி. திஸ்ரோஷ்டிகாலம். அஷ்டமி.

1— 1—89 ஞாயிறு, ஆங்கில வருடப்பிறப்பு.

2— 1—89 திங்கள், ஸ்ரீ மானக்கஞ்சாற நாயனுர் குருபூஜை.

5— 1—89 வியாழன், குருபிரதோஷம்.

6— 1—89 வெள்ளி, மாத சிவராத்திரி.

7— 1—89 சனி, சர்வ அமாவாசை. ஸ்ரீ அனுமத்ஜெயந்தி. ஸ்ரீ சாக்கிய நாயனுர் குருபூஜை.

9— 1—89 திங்கள், சிரவண விரதம்.

10— 1—89 செவ்வாய், கர்ப்போட்ட நிவர்த்தி. 40-33.

11— 1—89 புதன், கூடாரைவல்லி. தனுர் வியதீபாதம். சதுர்த்திவிரதம்.

13— 1—89 வெள்ளி, போகிப்பண்டிகை. சஷ்டிவிரதம். மகர ரவி 56-10. குத்தாலம் ஸ்ரீ உக்தவேதீசுவர சுவாமிக்கு புஷ்ய உற்சவ ஆரம்பம்.

தருமை ஆதீனம்

ஞானசம்பந்தம் பதிப்பகம் வெளியீடுகள்

விலைப் பட்டியல் - 4

1.	திருஇடும்பைமாகாளத் திருப்பதிகம் ரூ.	0—75
2.	திருஅரசிலித் திருப்பதிகம்	1—00
3.	திருநெல்வெண்ணெய் திருப்பதிகம்	0—60
4.	திருத்தலையூர் தலச் சிறப்பும் உருத்திரபசுபதி நாயனர் வரலாறும்	0—75
5.	திருத்துறையூர்த் திருப்பதிகம்	1—00
6.	திருமாணிக்குழித் திருப்பதிகம்	0—90
7.	திருஇலம்பையங்கோட்டூர்த் திருப்பதிகம்	0—90
8.	திருஇடைச்சுரத் திருப்பதிகம்	0—80
9.	திருவலிதாயம், வடதிருமுல்லைவாயில் திருப்பதிகம்	1—20
10.	திருமுண்டீச்சரத் திருப்பதிகம்	0—80
11.	திருஅச்சிறுபாக்கத் திருப்பதிகம்	0—85
12.	திருவாலங்காட்டுத் திருப்பதிகம்	1—60
13.	திருமாற்பேறு, திருவூறல் திருப்பதிகம்	1—40
14.	திருவொற்றியூர்த் திருப்பதிகம்	1—75
15.	திருப்பருப்பதம் திருப்பதிகம்	1—25
16.	திருவான்மியூர் திருப்பதிகம்	1—00
17.	திருக்கோகரணம் திருப்பதிகம்	1—50
18.	திருவழுவூர் வீரட்டம் தலச் சிறப்பு	0—85
19.	திருக்கழுக்குன்றத் திருப்பதிகம்	1—10
20.	திருக்கோவலூர், திருஅறையணிநல்லூர்த் திருப்பதிகம்	1—00

(அஞ்சல் செலவு தனி)

கிடைக்குமிடம் :— செயலாளர்,

ஞானசம்பந்தம் பதிப்பகம்,
தருமை ஆதீனம்
தருமபுரம் - மயிலாடுதுறை 609 001.

Printed & Published by V. Ramaiah Pillai Manager, Dharmapuram,
at the Gnanasambandam Press, Dharmapuram, Mayiladuthurai 10-12-88.